மாப்பிள்ளை வேட்டை

TRIPLICANE, MADRAS.

ரஞ்சன், பி.ஏ., எம். லிட்.

பிரசுரம்: பேஜம் பட்டம்,

M. I. P. PROJECT
Microfilmed.

கிடைக்குமிடம்:

நாட்டியம்

(புத்தக இலாகா)

கதீட்ரல் போஸ்ட் சென்னை—6.

50822

உரிமை பதிவு

விலை ரூ. 2-0-0.

ஸ்ரீ எஸ். எஸ். வாஸன்

அவர்களுக்கு

ஸமர்ப்பணம்

நமஸ்காரம்

'பலர் நாடகம் எழுதுகின்றார்களே, நானும் நாடகம் எழுதினால் என்ன?' என்ற எண்ணத்துடன் நான் இந்த நாடகத்தை எழுதவில்லை; நாடக ரூபத்தில் சிறந்த பொழுது போக்கை அளிக்க வேண்டும் என்ற ஆவலுடன் நான் இதை எழுதினேன்.

நமக்கு நல்ல சங்கீதம் கேட்க வேண்டுமானால், ஒரு பிரபலமான பாடகரின் கச்சேரிக்குச் செல்லுகிறோம். ஆனால், சிற்சில சமயங்களில் சில இளம் பாடகர்களின் சங்கீதத்தைக் கூடச் சகித்துக் கொண்டு காது கொடுத்துக் கேட்கிறோம். நான்கு பேர்கள் தன் சங்கீதத்தை ரஸித்துக் கேட்கிறார்களே என்ற நல்லெண்ணமே அந்த இளம் பாடகருக்கு உற்சாகத்தைக் கொடுக்கிறது. அதேபோல் இந்த நாடகத்தைப் படித்த சில நண்பர்களின் தூண்டுதலாலேயே இதைப் புத்தக ரூபத்தில் வெளியிடுகிறேன்.

இளம் பாடகரின் சங்கீதத்தில் எப்படிக் கல்பனைகளையும், ஸ்வரப் பின்னல்களையும், தாளக் கோர்வைகளையும் காண இயலாதோ, அப்படியே இலக்கியச் சுவையையும், ஆழ்ந்த கருத்துக்களையும், சொல்லலங்காரங்களையும் இந்த நாடகத்தில் காணமுடியாது. பொழுது போக்குக்காக எழுதப்பட்ட நாடகமே இது! அப்படி இந்த நாடகத்தைக் கடைசி வரையிலும் படித்தின்புற்று, "பரவாயில்லை. பொழுது வீணாக வில்லை" என்று ரஸிகர்கள் கருதினால் அதுவே என் முயற்சியின் வெற்றி.

இதைப் பிரசுரித்த 'பேசும் படம்' ஸ்ரீ ராமநாத் அவர்களுக்கும் நன்றாக அச்சிட்டுக் கொடுத்த ஸ்ரீ டி. கே. சாமி அவர்களுக்கும் என்னுடைய நன்றி என்றென்றும் உரியதாகும்.

ஸ்ரீ. வே. லட்சுமணன் அவர்களுடைய தூண்டுதல் இல்லாவிட்டால் இந்த நாடகம் அச்சில் ஏறி யிருந்திருக்காது. அவருடைய பேருக்கத்தாலும், ஒத்துழைப்பாலும் எனது சிறு நாடகம் வெளிவருகிறது; முதலில் என் நாடகத்தின் கையெழுத்துப் பிரதியை ருசியுடன் பொறுத்துக் கேட்டு, பிறகு கூட இருந்து அச்சுக் கோர்வைகளையும் மேற்பார்வை யிட்டு, கடைசி வரையில் உற்சாகத்துடன் இருந்து எனது முதலாவதான இந்த நாடகத்தைக் கொணர்ந்த பெருமை அவருடையதே போதிலும், அது எனது நன்றியை விடப் பெரிதாகுமா?

'நாட்டியம்' காரியாலயம்
கதீட்ரல்: சென்னை-6.
1—5—1949

மாப்பிள்ளை வேட்டை

கதைச் சுருக்கம்

★

கொழுத்த பணக்காரராகிய நீலமேகம் பிள்ளை, சுகுணன் என்ற யுவன் மீது காதல் கொண்டிருக்கும் தன் குமாரி குணவதியைக் கார்மேகம் என்ற காமுகனிடம் ஏராளமாகப் பணமிருப்பதாக நம்பி, அவனுக்கே மணம் செய்து வைக்க முயல்கிறார். அதே போல் ராஜரத்தினம் பிள்ளை என்ற தனவந்தர், நீலமேகம் பிள்ளை மகன் சுந்தரத்தின் மீது காதல் செலுத்தும் தன் மகள் சுந்தரியின் இஷ்டத்தை மறுத்து, பண ஆசையால் மார்த்தாண்டம் என்னும் மற்றொருவனுக்கு மணம் செய்து வைக்க ஆசைப்படுகிறார்.

குணவதி தன் அந்தரங்கத் தோழி ஜயாவின் ஒத்தாசையால் தந்தைக்குத் தெரியாமல் வெளியேறுகிறாள். அதுபோல் சுந்தரியும் தன் தோழியுடன் ஒருவரும் அறியாதவாறு தன் வீட்டைவிட்டு ஏகுகிறாள்.

குணவதியை அது வரையிலும் அறியாதவன் கார்மேகம்; ஆகவே ஜயா, தான் குணவதியாக அவன் முன் தோன்றித் தன்னை அவன் மணக்கும்படிச் சூழ்ச்சி செய்து விடுகிறாள்.

இதற்கிடையில், கார்மேகம் சுந்தரியாகத் தன்னைக் கூறிக் கொண்ட குணவதியைக் கண்டு, அவளுடைய ஆசை நாயகன் சுகுணன் என்பதை அறிந்து, தன் வழியில் அவன் குறுக்கிடாமல் இருப்பதை விரும்பி, அவனை அவளிடம் சேர்ப்பித்து விடுகிறான்.

கடைசியில் உண்மை வெளியாகிறது; உண்மைக் காதலும் வெற்றி பெறுகிறது! பண ஆசை பாதாளத்தில் படுத்து விடுகிறது!

மாப்பிள்ளை வேட்டை

கதாபாத்திரங்கள்

சுகுணன் — குணவதியின் காதலன்

குணவதி — சுகுணனின் காதலி; நீலமேகம் பிள்ளையின் மகள்

சுந்தரம் — சுந்தரியின் காதலன்; நீலமேகம் பிள்ளையின் மகன்

சுந்தரி — சுந்தரத்தின் காதலி; ராஜரத்தினம் பிள்ளையின் மகள்

கார்மேகம் — காமுகன்; பணப்பித்தன்

ஜயா — குணவதியின் அந்தரங்கத் தோழி.

ஸரஸா — சுந்தரியின் பிரதான சகி

நீலமேகம் பிள்ளை — தனவந்தர்; உலோபி

ராஜரத்தினம் பிள்ளை — ஊரில் ஒரு தனவந்தர்

மாணிக்கம் — சுகுணனின் முக்கிய வேலையாள்

சோமு — கார்மேகத்தின் தோழன்

சண்டமாருதம் — நீலமேகம் பிள்ளையின் வேலைக்காரன்

மாப்பிள்ளை வேட்டை

காட்சிகள்

★

காட்சி 1

சுந்தரம் தனது தங்கை குணவதியைச் சுகுணன் காதலிப்பதைக் கேட்டு மகிழ்ந்து அதை ஆமோதிக்கிறான். சுகுணனும் சுந்தரம் சுந்தரியை மணக்க விரும்புவதாய்ச் சொன்னதைக் கேட்டுப் பாராட்டுகிறான்.

காட்சி 2

நீலமேகம் பிள்ளை மகனுடன் தன் மகளின் மண விஷயத்தில் அபிப்பிராய பேதம் கொள்ளுகிறார். ஜயா என்ற தோழிப் பெண்ணின் சூழ்ச்சியால் குணவதி தந்தை யறியாமல் வெளியே ஓடி விடுகிறாள். குணவதிக்குப் பதில் வீட்டில் ஜயா இருக்கிறாள்.

காட்சி 3

குணவதியும் சுந்தரியும் தங்கள் காதலைப் பற்றி அளவளாவுகிறார்கள். குணவதி சுந்தரியின் பெயரைத் தனக்கிட்டுக் கொண்டு, தனக்குத் தந்தை நிச்சயித்திருக்கும் மணவாளனை கார்மேகத்தை ஏமாற்றிச் சுகுணனைத் தான் அடைய அவனையே சுகுணனிடம் ஏவுகிறாள்.

காட்சி 4

நீலமேகம் பிள்ளை தன் மகளின் அழகை வர்ணித்து, கார்மேகத்தைக் குணவதியின் அறைக்குள் அனுப்புகிறார்.

காட்சி 5

கார்மேகம் குணவதியின் வேஷத்தில் உள்ள ஜயாவைக் குணவதி யென்றே எண்ணுகிறான்.

காட்சி 6

குணவதியின் மனத்தைக் கொள்ளை கொண்டு விட்டதாகக் கார்மேகம் கூறும் செய்தி சுந்தரத்தின் காதில் விழுகிறது.

காட்சி 7

கார்மேகம் சுகுணனைத் தன் வழியிலிருந்து விலக்குவதற்காக, அவனைச் சுந்தரி யென்ற பெயர் வைத்துக் கொண்டிருக்கும் குணவதியிடமே சேர்த்து வைத்து விடுகிறான்.

காட்சி 8

நீலமேகம் பிள்ளை கார்மேகமும், குணவதியும் வெவ்வேறிடத்திலிருந்து அனுப்பிய கடிதங்களைப் படிக்கிறார்.

காட்சி 9

சுந்தரத்தின் தடுமாற்றம்.

காட்சி 10

இரண்டு ஜோடிக் காதலர்களும் நீலமேகம் பிள்ளையைக் காண அவர் வீட்டுக்குச் செல்கிறார்கள்.

காட்சி 11

கார்மேகத்துக்கும் குணவதியின் பெயருடன் உள்ள ஜயாவுக்கும் கலியாணம் நடக்கிறது.

காட்சி 12

உண்மைக் காதலர்களைப் பிணைத்து வைக்கிறார் நீலமேகம் பிள்ளை.

★

மாப்பிள்ளை வேட்டை

★

காட்சி 1

இடம்: வீதி.

காலம்: விடியற்காலை.

(மாணிக்கம் கையில் மங்கலாக எரிந்து கொண்டிருக்கும் விளக்குடன் வருகிறான்.)

மாணிக்கம்: நன்றாக இருக்கிறது! நடுநிசி கழிந்து மணி மூன்று அடிக்கப்போகின்றது. ஹஹா! தெருவில் 'ரோந்து' சுற்றிக் கொண்டிருக்கிறேன். ஏன்! என் எஜமானர் காதல் வேட்டைக்குப் போய் இன்னும் திரும்பவில்லை. அதனால் தான். பெரிய எஜமானர் சின்ன ஐயாவிடம் கூடமாட உதவியாக இருக்கச் சொன்னார். ஆனால் இந்த உத்தியோகம்கூடக் கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. அப்பப்பா! எந்த மனிதனிடத்திலும் எந்த வேலையையும் செய்து விடலாம்; ஆனால், இளம் வாலிபர்களிடம், அதுவும் அவர்கள் காதல் கடலில் நீந்திக் கொண்டிருக்கும் போது எந்த வேலையும் செய்வது முடியாத காரியம்! அவர்களுக்கென்ன? பொழுது போவது ஏதாவது தெரியுமா என்ன? ஒன்றும் தெரியாது.

நானும் தான் என் சிறுவயதில் ஒரு அதிரூப சுந்தரவதியினிடத்தில் தெய்வீகக் காதல் கொண்டிருந்தேன். அப்போது இப்படியெல்லாம் அகாலங்களில்......

(சுந்தரம் வருகிறான்.)

சுந்தரம் : அடே! மாணிக்கம். அவளைப்பற்றியே நினைத்துக் கொண்டு உருகுகிறாயே! அவள் தான் உன்னை விட்டு ஓடிவிட்டாளே!

மாணிக்கம் : என்ன எசமான்! என்ன சொல்றீங்க?

சுந்தரம் : ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை.

மாணிக்கம் : அதுதானே கேட்டேன்.......உம்......எசமான், நீங்கள் அப்போதப்போது சிரம பரிகாரத்திற்காகக் கொஞ்சமாவது 'அப்பாடா' என்று தூங்கினால் உங்கள் உடம்பிற்கு நல்லது என்று என் எண்ணம். ஒவ்வொரு நாளும் தூங்கவேண்டும் என்று நான் சொல்லவில்லை. அப்படி வாரத்திற்கு ஒரு தடவை, இரண்டு தடவை...ஹி...ஹி...ஹி...

சுந்தரம்: கழுதை! தூக்கத்தைப் பற்றி என்னிடம் பேசாதே. பசி, தாகம், தூக்கம் என்பதே என் அகராதியில் கிடையாது.

மாணிக்கம் : (தனக்குள்) ஐயனே, எப்படி இருக்கும்! இருக்காதுதான் !

(வெளிப்படையாக) எசமான்! கொறட்டை விட்டுக்கொண்டு கும்பகர்ணன் மாதிரி சிலர் தூங்குகிறார்களே, அந்த மாதிரி தூக்கத்தை நான் குறிப்பிடவில்லை. அப்படி ....எப்போதாவது ஸோபாவில் சாய்ந்துகொண்டு ஒரு பத்து,

பதினைந்து நிமிஷங்கள், கண்களுக்குச் சற்று ஓய்வு கொடுக்கலாமே! அதைத்தான் சொல்ல வந்தேன்! கண்களை மூடிக்கொண்டால் தூக்கத்திற்குத் தூங்கினாற்போலும் இருக்கும்; தூக்கம் வராவிட்டால் காதலியைப்பற்றி இனிய கனவு கண்டாற்போலும் இருக்கும்.

சுந்தரம்: அமைதி! அமைதி! சற்றுப்பொறுமையாக இரு மாணிக்கம்......! ஹா! என் காதலி! சுந்தரீ, கொஞ்சம்கூடத் தயாதாக்ஷண்யமில்லாமல் என் ஹிருதயத்தைப் பிளக்கிறாயே? இது உனக்குத் தர்மமா? மனச்சாந்தியே இல்லாமல் என்னைக் கலங்கடித்து விட்டாயே!

மாணிக்கம்: (தனக்குள்) எனக்கு மட்டும் மனச்சாந்தி ஏது? இந்தப் புண்யவான் தான் எனக்கு மனச்சாந்தியே இல்லாமல் அடித்துவிட்டாரே!

சுந்தரம்: சுந்தரீ! கருமான் இரும்பை அடித்து நொருக்குவது போல் என் ஹிருதயத்தைப் பிளக்கிறாயே; இவ்வளவு இரக்கமற்ற நெஞ்சையுடையவளா நீ? சுந்தரீ!......இருக்காது, இருக்கவே இருக்காது... அவள் என்னை உண்மையாகக் காதலிக்கிறாள்! ஆனால் என்னைச் சோதிக்கிறாள். ம்...ம்... ஒருவேளை உண்மையாகவே என்னிடம் காதல் கொள்ளவில்லையோ! ஆம்; காதல் கொள்ளவில்லை தான் போல் இருக்கிறது.

மாணிக்கம்: (தனக்குள்) ஆமாம், நானும் அப்படித்தான் நினைக்கிறேன்.

சுந்தரம்: இருக்காது! அப்படி யிருக்காது! என்ன இருந்தாலும் அவள் பேதைப் பெண்தானே! பெண்களுக்குரிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு

அனைத்தும் அவளைக் கட்டிப் பிடித்து, ஒருங்கே திணற அடித்து விட்டன. அப்படி யிருக்க அவள் எவ்வாறு என்னிடம் அவளுடைய காதலை வெளி யிடுவாள்? இல்லை, இல்லை...... ஒரு சமயம், என் னுடன் மிகவும் அன்புடன் தேனொழுகப் பேசு கிறாள். ஆனால் மறுசமயம், வேண்டா வெறுப்பாகச் சலிப்புடன் வாதாடுகிறாள். இந்தச் சுந்தரியைப் போல் திடமில்லாத மனதுடையவள் இந்த உலகி லேயே இருக்க முடியாது.

மாணிக்கம்: (தனக்குள்) அப்பேர்ப்பட்ட ஒருத்தியை எனக் கும் தெரியும்.

சுந்தரம்: சுந்தரியைப்போல், ஹிருதயத்தில் பச்சாத்தாப மும் அன்பும் இல்லாதவளும், வார்த்தைகளில் குரூரமும் பசப்பும் படைத்தவளும், குணத்தில் பிடி வாதமும் முரட்டுத் தன்மையும் உடையவளுமான ஒருத்தியை நான் இதுவரையில் அறியேன்... ஹா!.. அவள் என்னைப் பார்த்துக் கண்களை ஓட்டும்போது என்ன அலட்சியம்! அவள் சிரிப்பு- அவள் புன் சிரிப்பு- காற்றினால் அசைக்கப்பட்ட, மலர்ந்த செந் தாமரையின் இதழ்களில் முத்துக்கள் அங்கும் இங் கும் ஓடுவதுபோல் இருக்கிறது.......முடியாது..... முடியாது...அவளை நான் எவ்வாறாயினும் அன் பினால் ஜயித்து, அடைந்தே ஆகவேண்டும். இல்லாவிடில் இந்த உயிர் உடலை விட்டுப் பிரிந்து விடும்.

மாணிக்கம்: (தனக்குள்) அசல் காதல் நாடகம் போலிருக் கிறதே! அடேடே! (யாரோ வருவதைக் கவனிக்கி றான்.) காதல் சமுத்திரத்தில் மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருக்கும் மற்றொருவர் வருகிறார். நான்

இப்போது ஒதுங்கியே நிற்க வேண்டும், ஜாக்கிர தையாக இல்லாவிடில், 'மூழ்கப் போகிறவன் ஆதாரத்திற்குப் புல்லைப் பிடித்துக் கொண்டா னும்' என்ற கதையாகிவிடும். எங்கேயாவது என் னையும் காதல் சமுத்திரத்தில் மூழ்கடித்துவிடப் போகிறார்!...ம்...மனமே! திடம். திடம் !...காத லுக்கு இடமில்லை இந்த ஹிருதயத்தில்!

(சுகுணன் வருகிறான்.)

சுந்தரம் : தோழன் சுகுணன் வருகிறான் போலிருக்கிறதே! ...டேய் மாணிக்கம், நீ வீட்டுக்கு முன்னால் போ, நான் பிறகு வருகிறேன்.

மாணிக்கம் : (தனக்குள்) நல்ல வேளை! பிழைத்தேன்! பிழைத்தேன்!!

(மாணிக்கம் போகிறான்.)

சுந்தரம் : (தனக்குள்) நேற்றுதான் என் தங்கை குணவதி என்னிடம் வந்து, அவளும் சுகுணனும் சில நாட் களாகவே, ஒருவருக்கும் தெரியாமல் அடிக்கடி சந்தித்து வருவதாகச் சொன்னாள். எனக்கு முத லில் ஆச்சரியமாகத்தான் இருந்தது. ஆனால் அவள் எனக்கும் சுந்தரிக்கும் உள்ள காதலை உபமானமாக எடுத்துக் காட்டி, சுகுணனுக்கும் அவளுக்கும் வேண்டிய உதவிகளைச் செய்யும்படி கேட்டுக் கொண்டாள். மேலும், சுகுணனுடைய அந்தரங் கத்தை அறிந்து வரச் சொன்னாள். இது தான் நல்ல சமயம்.

(சுந்தரம் வருவதைச் சுகுணன் கவனிக்கிறான்.)

சுகுணன் : என்ன சுந்தரம், நடு நிசி கழிந்து மூன்று மணி ஆகின்றது. இங்கு நின்று கொண்டு என்ன செய்து கொண்டிருக்கிறாய். ஏது? காதல் வேட்டையில் வெற்றியா, தோல்வியா? தோல்விபோல் தோன்று கிறதே!

சுந்தரம் : ஆம், சுகுணா! நீ சொல்வது வாஸ்தவம் தான். நேற்றிரவு பத்து மணிக்குச் சுந்தரியைச் சந்தித்தேன். இன்னும் எனக்கு வீட்டிற்குப் போக மனம் வரவில்லை...சரி. அது போகட்டும், நீ இந்த அகால வேளையில், இந்த இடத்தில்...

சுகுணன் : நீயாவது உன் காதலியை நேற்றிரவு சந்தித்தாய். நானோ அந்தப் பாக்யத்தைக் கூடப் பெறவில்லை.

சுந்தரம் : என்ன சுகுணா! புற்றிலிருந்து திடீரென்று பாம்பு கிளம்புவது போல், ஏதோ சொல்லிவிட்டாயே. நீ சொல்வது என்ன உண்மையா?

சுகுணன் : நிஜமாய்த்தான் சுந்தரம்.

சுந்தரம் : சுகுணா! "நான் கள்ளக்காதலே ஒருகாலும் புரிய மாட்டேன். அது நேர்மையான வழியல்ல. பெற்றோர் சம்மதமில்லாமல் ஒன்றும் செய்யக்கூடாது' என்று என்னென்ன வெல்லாமோ சொல்லி எனக்கும் உபதேசம் செய்தாயே? "இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமா" என்று இருந்து விட்டு, கள்ளக் காதலா......இப்போது? பேஷ் சுகுணா! பேஷ்!!

சுகுணன் : சுந்தரம், நான், காதலிக்கும் வனிதை யாரென்று உனக்குத் தெரிந்திருந்தால், என்மேல் குற்றம் சாட்டமாட்டாய்.

சுந்தரம் : என்ன சுகுணா! இன்னும் கொஞ்சம் நேரம் போனால் உன் காதலியைப்பற்றிக் கவிதையே பாட ஆரம்பித்து விடுவாய் போலிருக்கிறதே? ...ம்...ம்... உன் மனதைக் கொள்ளை கொண்ட அந்த அதியற்புத சுந்தரவதி யார் என்பதைக் கூறுவாயா?

சுகுணன்: அவள் அழகை வெறும் வார்த்தைகளினல் வர்ணிக்க இயலாது. பூரண சந்திரனைப் பழிக்கும் மலர்ந்த வதனமும், மீன்களை யொத்த நீண்ட விழிகளும், மன்மதன் வில்லைப்போல் வளைந்த புருவங்களும், எள்ளுப்பூப் போல் நாசியும், கோவப்பழம் போன்ற அதரங்களும், கருநாகத்தைப் பழிக்கும் நீண்ட கரிய கேசமும், சங்கைவிட வெண்மையான கழுத்தும், தாமரைத் தண்டுகளைப் போன்ற கரங்களும், உடுக்கையைவிடச் சிறிய இடையும்... மேலும் சொல்லுவானேன். ரதியே உருவெடுத்துக் கொண்டு பூலோகத்தில் வசிக்கிறுள் என்றுல் மிகையாகாது. ஆஹா! அவள் உச்சரிக்கும் சொற்கள் வீணையின் ஸுநாதத்தைக் கர்ண கடூரமாக்குகின்றன. அவள் நடையோ ஒவ்வொரு சமயம் பிடியைப்போல் கம்பீரமாயும், மற்ெருருசமயம் அன்னத்தைப்போல் நளினமாகவும் இருக்கிறது. அவளுடைய பார்வை ஒரு சமயம், என்னைச்சிலையைப் போல் உயிரற்றிருக்கும்படிச் செய்கிறது. மறு சமயம் உயிரற்ற சிலைக்குப் புத்துயிர் அளிப்பது போல் இருக்கிறது.

சுந்தரம்: அப்பா சுகுணு! எனக்கு இப்போது, உன்னுடைய காதலியைப் பற்றிய வர்ணனையைக் கேட்டுக் கொண்டிருக்க அவகாசம் இல்லை. இருந்தாலும் உனக்கு ஏதாவது என்றுல் ஆகவேண்டிய உதவியிருந்தால் சொல்லு; என்றுல் முடிந்த வரையில் அதைச் செய்கிறேன். ஆமாம் அந்த வனிதை யார் என்று சொல்லவில்லையே?

சுகுணன்: நண்பா! அந்த வனிதையை நான் எப்படியாவது மணந்துகொள்ள வேண்டும். இல்லையேல், என் உயிரைத் துறக்கச் சித்தமாக இருக்கிறேன்... என்

கண்களுக் கெதிரில் அவள் வேறெவரையும் மணப்பதைவிட, நான் உயிரை விடுவதே மேல் சுந்தரம்!.........

சுந்தரம்: சுகுணு! உன்னுடைய காதல் இவ்வளவு ஆவேசத்துடன் இருப்பதைக் கவனிக்கும்போது அவ்வளவும் உண்மைதானு என்று எனக்குச் சந்தேகம் உண்டாகிறது.

சுகுணன்: என்ன சுந்தரம்! இப்படிச் சொல்லிவிட்டாயே! என் பேரில் அவள்கூடச் சந்தேகப்பட வில்லையே! நண்பா, என்னை அவ்வாறு சந்தேகிக்காதே.

சுந்தரம்: சரி, போகிறது. நான் சொன்னதைப் பொருட்படுத்தாதே! ஏதோ வேடிக்கையாகச் சொன்னேன். உம்...அந்த அதிரூபவதியின் பெயரை இன்னும் சொல்லவில்லையே!

சுகுணன்: உம்......அவள் பெயரா......!

சுந்தரம்: ஆம்; சொல்லேன்; ஏன் தயங்குகிருய்?

சுகுணன்: உம்... அவள் பெயர் குணவதி.

சுந்தரம்: குணவதியா?... என் தங்கையின் பெயரும் குணவதிதான். ஆமப்பா, நீ குணவதி என்று சொல்லுகிருயே, அந்தப் பெண் யார்? நான் இதுவரை கேள்விப்பட்டதுமில்லை; பார்த்ததுமில்லையே,

சுகுணன்: நண்பா! உனக்குத் தெரிந்திருக்கும் என்றல்லவா நினைத்தேன்! என் ஹிருதயத்தைத் தயாதாக்ஷண்யம் இல்லாமல் திருடிச் சென்றவள் உன்........

சுந்தரம்: என்...?

சுகுணன்: உன் தங்கை குணவதி தான், சுந்தரம்!

சுந்தரம்: ஆ! என்ன? என் தங்கை குணவதியா? குணவதி உன்னைக் காதலிக்கிருளா? எனக்குத் தெரியவே தெரியாதே!

சுகுணன் : சுந்தரம், நான் உன் தங்கையைக் காதலிக்கிறேன் என்று சொன்னதால், உனக்கு என்பேரில் அருவருப்பு ஏற்பட்டுவிட்டதா? என்மேல் கோபமா? உன் தங்கையை மணக்க நான் அருகதையற்றவன் என்பதை நன்கு உணர்வேன். ஆனால், உன் தங்கையை, என்னைவிட வேறு ஒருவனாலும் உண்மையாக நேசிக்கமுடியாது என்று உறுதியுடன் உரைப்பேன். என்னை நம்புகிறாயா? சுந்தரம், இதை உன்னிடம் சொல்லவேதான் உன்னை நாடி வந்தேன்.

சுந்தரம் : சுகுணா! அப்படியெல்லாம் தவறாக நினைக்காதே! உன்னுடைய உண்மைக் காதலை நான் மெச்சுகிறேன். என் தங்கை குணவதிக்கு நீயே கணவனாக வாய்த்தால் அது எனக்கு அளவிலாத மகிழ்ச்சியைத் தரும். ஆனால், நீ மிகவும் நேர்மையான வழியிலேயே என் தங்கையின் கரத்தைப் பற்றுவாய் என்று நம்புகிறேன்.

சுகுணன் : சுந்தரம்! என்னுடைய லட்சியமும், உன் தங்கையின் கரத்தை நேர்மையான வழியில் பற்றுவதே தான்.

சுந்தரம் : சுகுணா, காலையில் முதல் காரியமாக என் தகப்பனாரைச் சந்தித்து, விஷயங்கள் எப்படி இருக்கின்றன என்று அறியப் போகிறேன். சரி, நான் போய் வருகிறேன். கடவுள் கிருபையால் நீ குணவதியை அடைவாய் என நம்புகிறேன்.

சுகுணன் : சுந்தரம், கடவுள் கருணையால் நீயும் சுந்தரியும் ஒன்றுபட்டுச் சுகமாக வாழ வேண்டும். நான் சென்று வருகிறேன்.

(இருவரும் போகிறார்கள்.)

★

காட்சி 2.

இடம்: நீலமேகம் பிள்ளை வீடு

காலம்: பிற் பகல்

(குணவதியும் ஐயாவும் வருகிருர்கள்.)

குணவதி: அடீ, ஐயம்! இந்தக் காரியம் ஐயமடையுமா?

ஐயா: மறுமுறை சொல்லுகிறேன். இதைப்பற்றி இனி, கொஞ்சம்கூடச் சஞ்சலப்படாதீர்கள். நான் எடுத்த எந்தக் காரியத்தையாவது ஐயத்துடன் முடிக்காமல் இருந்திருக்கிறேனு? இல்லாவிட்டால் ஐயம் என்ற பெயருக்குத்தான் என்ன பொருத்தம்? எல்லாவற்றையும் சித்தமாக ஏற்பாடு செய்து விட்டேன். இனிமேல் தெய்வத்தின் பேரில் பாரத்தைப்போட வேண்டியதுதான்.

குணவதி: ஐயா! நேற்று என் தகப்பனுர்...........

ஐயா: தெரியுமே! எல்லாவற்றையும் நான் கதவு மூலையில் நின்றுகொண்டு ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தேன். உங்கள் தந்தை தாயாரிடம் இவ்வாறு சொல்லிக் கொண்டிருந்தார்: "நாளைக்குக் குணவதியைக் கேட்கப் போகிறேன், 'கார்மேகத்தைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிருயா?' என்று. அதற்கு அவள் 'சரி' என்று சொல்லத் தாமதித்தால், கார்மேகத்தைக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதிக்காதவரையில் அவளுடன் நான் பேசப் போவதில்லை என்று சத்தியம் செய்யப் போகிறேன்."-இப்படியாகத்தான் சொன்னுர்.

குணவதி: ஐயா! இதை அறிந்துதான இந்தச் சதியைச் செய்யத் திட்டம் போட்டிருக்கிருய்! நீ ரொம்ப கெட்டிக்காரியடி!

ஜயா: குணவதி! நீங்கள் எனக்கு வாக்குக் கொடுத்ததை மட்டும் மறந்து விடாதீர்கள். நான் எப்படியாவது கார்மேகத்தை ஏமாற்றி அவரைக் கல்யாணம் செய்துகொண்டு விடுகிறேன். அப்போது நீங்கள் சொல்லியபடி, அவருடைய சொத்து அனைத்தும் என்னைச் சேரும்படி உதவி செய்ய வேண்டும்.

குணவதி: என்னால் ஆன உதவியை உனக்கு நான் அவசியம் செய்வேன். உம்.........ஜயா! என்னவென்றாலும், ஒரு விதத்தில் நீ அதிர்ஷ்டசாலிதான். உனக்குக் கணவனாகப் போகும் கார்மேகம் என் அன்பர் சுகுணரைப்போல் இருபது மடங்கு பணக்காரர்.

(தனக்குள்) என் அன்பர் ஏழையாக இருந்தால் என்ன? எப்பொழுதும் அவர் என் அருகிலேயே இருந்தால் அதுவே போதும். அதுவே குபேர சம்பத்து. சுகுணர் அன்று வந்து என்னுடன் பேசும்பொழுது, என் மனதிற்கே இஷ்டமில்லாமல், அவருடன் சற்று வெறுப்புடன் பேசுவது போல் பாவனை செய்தேன். பாவம், சுகுணர்! இதை நிஜம் என்றெண்ணி வேதனைப்பட்டுக் கொண்டிருப்பார். என் தமையன் சுந்தரம் இன்னும் வரவில்லையே! என் அன்பர் சுகுணரைச் சந்தித்தாரோ என்னவோ?

(நீலமேகம்பிள்ளை வரும் சப்தம்)

ஜயா: குணவதி! உங்கள் தகப்பனார் வருகிறார். எங்கே சுகுணர் உங்களுக்கு எழுதிய காதல் கடிதம்? அதை நான் கையில் வைத்துக் கொண்டிருந்தால் தான், அவர் அதைப் பார்த்து 'அது என்ன? என்று

கேட்பார். அதைப் பார்த்ததும் என்னைக் கண்டபடி திட்டி, உடனே வேலையைவிட்டு நீக்கி வீட்டை விட்டும் துரத்துவார். அப்போதுதான் நம் இருவர் காரியமும் ஜயமடையும்......

(கடிதத்தை ஐயா கையில் எடுத்துக் கொண்டு போகிறான். நீலமேகம் பிள்ளையும் சுந்தரமும் வருகிறார்கள்.)

நீலமேகம் : என்ன சுந்தரம்! இரவெல்லாம் வெகுநேரம் கழித்து வருகிறாயாமே! 'காதல் கீதல்' என்று சொல்கிறார்களே! அது மாதிரி ஏதாவது காதல் சேஷ்டைகள் செய்கிறாயா? வயது வந்த பிள்ளைகளுக்குத் தானாகத் தெரியாவிட்டால் சொல்லியா தெரியப் போகிறது. பார்! உன்னால் உன் தங்கையும் காதல் காதல் என்று ஆரம்பித்துவிட்டது. காதலாம் கத்தரிக்காயாம்! (குணவதியைப் பார்த்து) இந்தாம்மா குணவதி! இன்றோடு உன்னுடைய காதலுக்கெல்லாம் ஒரு முற்றுப் புள்ளி வைத்துவிடு. நாளைக்குக் காலையில் கார்மேகம் என்பவர் வருகிறார். நல்லகொழுத்த பணக்காரர். கிராமத்தில் நூறு வேலி நிலமும், ரொக்கமாக இருபது லக்ஷமும் இருக்கின்றனவாம். அவர்தான் உனக்குக் கணவராக வரப்போகிறார்.

குணவதி : யார்? கார்மேகமா? என்ன? என் அன்பர் சுகுணரைத் தவிர, வேறொருவரையும் நான் மணக்க மாட்டேன்.

சுந்தரம்: தந்தையே! நீங்கள் ஒருவருக்கும் தெரிவிக்காமல் திடீரென்று கல்யாணத்தை இப்படி ஏற்பாடு செய்வது நன்றாக இருக்கிறதா? குணவதியின்

மனத்தை அறிய ஒரு வார்த்தையாவது அவளைக் கேட்டீர்களா? மேலும் கார்மேகத்தை யாராவது மருமகப் பிள்ளையாக...!

நீலமேகம்: போதும். சுந்தரம், நிறுத்து. அநாவசியமாகப் பேசாதே. ஆமாம். கார்மேகம் ஏன் எனக்கு மரு மகப் பிள்ளையாக வரக்கூடாது?

சுந்தரம்: கார்மேகத்தைப்பற்றி ஒருவருக்கும் அதிகமாகத் தெரியாது. அவருடைய சொத்து சுதந்திரத்தைப் பற்றியே சந்தேகத்திற்கிடமாக இருக்கின்ற தென்று அறிகிறேன்.

நீலமேகம்: அதைப்பற்றி உனக்கென்ன கவலை? நான் எல்லாவற்றையும் விசாரித்து விட்டேன். உன் னுடைய சந்தேகத்திற்கெல்லாம் ஆதாரமே கிடை யாது...... சொத்துடன் மாப்பிள்ளை வருவதை விட்டு விட்டு......சரி, சரி. வேறு ஏதாவது பேச வேண்டியது இருக்கிறதா?

சுந்தரம்: இருக்கிறது.........கார்மேகம் பார்ப்பதற்குக் கொஞ்சம் கூட லட்சணமாக இல்லை. நம் குண வதிக்குத் தகுந்த அழகுள்ள மணாளனைப் பார்ப்பது நம் கடமை யல்லவா?

நீலமேகம்: அடே! கடமையாம் கடமை......!கடமையை யும் அழகையும் கண்டு விட்டானும் இவன்! ஏண் டாப்பா சுந்தரம், நீ பாட்டுக்கு என்னவெல்லா மோ அடுக்கிக் கொண்டே போகிருயே!......ம்... கார்மேகத்தை நீயா கல்யாணம் செய்துகொள்ளப் போகிருய்?

சுந்தரம்: அப்படிச் சொல்லவில்லை நான்.

நீலமேகம்: பின்னே, சும்மா இரு........சரி, மேலும் ஏதாவது எதிரிடையாக உண்டா?

குணவதி: ஆஹா! நன்றாக உண்டு. கார்மேகம் எனக்குப் பிடித்தவனல்ல. நான் அவனை மனதினாலும் தீண்ட மாட்டேன்.

நீலமேகம்: ஆனால் கார்மேகத்திற்கு உன்னை மிகவும் பிடித்திருக்கிறதாம். அதனால் நீ அவனைக் கல்யாணம் செய்து கொண்டுதான் ஆகவேண்டும்.

குணவதி: அவன் என் பிரேதத்திற்குத்தான் மாலையிட வேண்டும்.

நீலமேகம்: குணவதி, நீ என் பொறுமையைச் சோதித்து விட்டாய். இனி என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது. சரி....

(தனக்குள்) கல்யாணம் முடிந்ததும் யாவருக்கும் ஒரு மாறுதல் ஏற்படுவது இயல்பே. அதில் எனக்கு நல்ல நம்பிக்கை உண்டு. என் பெண்ணுக்கு அவள் விருப்பமில்லாமல், நான் பலாத்காரமாகக் கல்யாணத்தை முடித்தாலும், அவளுக்கு நன்மையைத் தான் தேடிக்கொடுக்கிறேன் என்ற நல்ல நம்பிக்கை எனக்கு உண்டு.

(வெளிப்படையாக) போகட்டும். குணவதி! கடைசி முறையாகக் கேட்கிறேன். கார்மேகத்தைக் கல்யாணம் செய்து கொள்ளுவதற்கு, உனக்குச் சம்மதமா, இல்லையா?

குணவதி: அப்பா! இந்தக் கல்யாண விஷயத்தைத் தவிர வேறெந்த விஷயத்திலும் தங்கள் வார்த்தையைத் தட்டமாட்டேன்.

நீலமேகம் : என் மகள் எனக்குக் காண்பிக்கும் மதிப்பு இவ்வளவு தானா? என்னை அவமதிக்க நீ துணிந்து விட்டாயா?

குணவதி : இல்லை! மகளிடம் தங்கள் மதிப்பை இழக்க நீரே துணிந்து விட்டீர்.

நீலமேகம் : என்னை வஞ்சிக்க வந்த நஞ்சே!

குணவதி : கல் நெஞ்சம் படைத்தவரை இந்த நஞ்சு என்ன செய்துவிடும்?

நீலமேகம் : நொண்டிக்குதிரை சறுக்கி விழுந்ததுமல்லாமல் குழியையும் பறித்ததாம் என்றல்லவோ இருக்கிறது, உன் போக்கு.

குணவதி : முட்டைகளிட்டதும் அவைகளையே தின்று விடுமாம் பாம்புகள். அதுபோல் இருக்கிறது, உங்கள் சர்க்கு.

நீலமேகம் : உன் வீண் வாதத்திற்கு என்னிடம் மருந்து கிடையாது.

குணவதி : என் வாதத்திற்கு மருந்து உண்டு. ஆனால் உங்கள் பிடிவாதத்திற்குத்தான் மருந்து கிடையாது.

நீலமேகம் : போதும் உன் பேச்சு. என் வார்த்தையை மதித்துக் கார்மேகத்தைக் கல்யாணம் செய்து கொள்ளுகிறேன் என்று சொல்லும் வரையில் நான் உன்னுடன் பேசப் போவதில்லை. உன் முகத்திலும் விழிக்கப் போவதில்லை. இது என் சபதம். நான் உன்னை, உன் அறையில் தள்ளிவிட்டு வெளியில் பூட்டிக்கொண்டு சாவியை என்னிடமே வைத்துக்கொள்ளப் போகிறேன். இனிமேல் ஒரு

குருவியும் உன்னிடம் பேச அணுக முடியாது. அப்போதாவது நீ என் வழிக்கு வருகிறாயா என்று பார்க்கிறேன். போ! என் கண்முன் நில்லாதே.

(நீலமேகம்பிள்ளை குணவதியை அறையுள் தள்ளிவிடுகிறார்.)

சுந்தரம் : அப்பா! குணவதியை அனுவசியமாக அதட்டி வருத்தப்படும்படிச் செய்து விட்டீரே, பாவம்! அவளுடைய மன அந்தரங்கத்தைக் கொஞ்சங்கூட அறிந்து நடக்க மாட்டேன் என்று பிடிவாதம் செய்கிறீர்களே! குணவதிக்கு, சுகுணன் பேரில் அன்பு ஏற்பட்டிருக்கிறதென்பது தங்களுக்குத் தெரியாததா?

நீலமேகம்: ஓகோ, உன் தங்கைக்கு இவ்வளவு தூரம் பரிந்து பேசுவாய் என்று நான் கனவிலும் நினைக்கவில்லையே!

சுந்தரம் : என்னைப் பற்றிய வரையில் நம் வீட்டிற்கு மருமகப்பிள்ளையாக வருவதற்குச் சுகுணனைத் தவிர வேறு ஒருவருக்கும் யோக்கியதை இல்லை.

நீலமேகம்: ஆனால் குணவதி என் பெண் என்பதை மறக்காதே. ஆதலால் என் பெண்ணுக்கு என் இஷ்டப்படி. நான் மருமகனைத் தேடிக் கொண்டால் அதற்கு நீ ஏன் குறுக்கே நிற்கிறாய்? தம்பி சுந்தரம்! போதும், இனிமேல் என்னை வம்புக்கு இழுக்காதே.

சுந்தரம் : தங்கையின் மேல் எனக்கு வாத்ஸல்யம் இருக்காதா?

நீலமேகம்: தந்தையின் பேரில் உனக்கு மதிப்பு இருக்கக் கூடாதா?

சுந்தரம்: கடைசியாக உங்களை ஒரே ஒரு வார்த்தை கேட்கலாமா?

நீலமேகம்: சரி, கேள்.

சுந்தரம்: தங்களுக்கும் வாலிபப் பருவத்தில் ஒரு காதலி இருந்து, அவளுடைய பூரணமான காதலையும் நீங்கள் பெற்றிருந்து, உங்களுடைய காதலுக்குக் குறுக்கே உங்களுடைய தந்தை முட்டுக்கட்டையை வைத்தால் நீங்கள் என்ன செய்திருப்பீர்கள் என்று சற்று யோசித்துப் பாருங்கள்.

நீலமேகம்: தம்பி சுந்தரம், நீ சொல்வது உண்மை. ஆனால் நான் சொல்லப் போவதும் உண்மைதான். நான் உன் தாயாரை, அவளுடைய பணத்திற்காகத்தான் கல்யாணம் செய்துகொண்டேன். கல்யாணத்திற்குப் பிறகு கூட நாங்களிருவரும் காதல் கீதல் என்று பேசியதேயில்லை. இதனால் எனக்கு ஒரு குறைவும் வந்ததில்லை. உன் தாயாரும் அவளுடைய தகப்பனாரின் வேண்டுகோளுக்கு இணங்கித் தான் என்னை மணம் செய்துகொண்டாள். ஏண்டா, பாருடா தம்பி! எங்களுக்கு என்ன குறைவு வந்து விட்டதைக் கண்டு விட்டாய், சொல்............சரி. எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது. நான் போகிறேன். இனி உன் வேலையைக் கவனி.

(நீலமேகம் பிள்ளை போகிறார்.)

சுந்தரம்: (தனக்குள்) என் நண்பன் சுகுணனுக்கு அதிர்ஷ்டம் இவ்வளவு தான் போலிருக்கிறது. ஆனால் என் தங்கை குணவதி, தன் சாமர்த்தியத்தைப் பயன் படுத்திக்கொள்ளாமல் இருக்கமாட்டாள். மேலும், தகப்பனார் அவளுடைய உத்ஸாகத்தைக் குலைக்க

யத்தனித்தால், அவளுக்குச் சுகுணன் பேரில் இருக்கும் காதல் பன் மடங்கு அதிகமாகுமே ஒழியக் குறையாது. ஒரு பெண் தன் காதலனுக்காக எவ்வளவு வேண்டுமானாலும் தியாகம் செய்வாள். இது உலகத்தில் யாவரும் கண்டறிந்த விஷயம்.

(நீலமேகம் ஜயாவைக் கோபித்துக் கொண்டு, அவளை இழுத்துக் கொண்டு வரும் சப்தம்.)

நீலமேகம்: (திரைக்குப்பின்) இது என்ன விந்தை! ஒரே ஆச்சர்யமாகவும் பயமாகவும் இருக்கின்றதே! எல்லோரும், எனக் கெதிராகவே சதி செய்கிறார்களே!

சுந்தரம்: இதென்ன சப்தம். ஜயாவை என் தகப்பனார் இழுத்துக் கொண்டு வருகிறார் போலிருக்கிறதே! இனி நான், இங்கே இருக்கக்கூடாது.

(சுந்தரம் போகிறான். நீலமேகம் பிள்ளை, ஜயாவை இழுத்துக் கொண்டு வருகிறார், கையில் கடிதத்துடன்.)

நீலமேகம்: எல்லோரும் பேசி வைத்துக் கொண்டிருக்கிறார்களா, என்ன? ஜயா, சுகுணனுடைய அந்தரங்கக் கையாளே! என் அருமைப் பெண்ணுக்குக் காவலாக உன்னை வைத்தால், அவளுக்கே வழிகாட்டி விட்டாயே. உன்னைச் சொல்லி என்ன பிரயோஜனம். எந்த மடையனாவது, தவளைக்குக் காவலாகப் பாம்பை விட்டுவைப்பானா?

ஜயா: ஆமாம், உண்மைதான்.

நீலமேகம்: இப்பொழுது உன்னைக் கையும் களவுமாகக் குணவதிக்குச் சுகுணன் எழுதிய இந்தக் காதல் கடிதத்

துடன் கண்டேனே, அதற்கு என்ன ஜவாப் சொல்லப் போகிறாய்.

ஜயம் : இதுதான். சுகுணன் குணவதிக்கு எழுதிய காதல் கடிதத்தை நீர் பார்த்து விட்டீர்; படித்தும் விட்டீர். சுகுணனுக்குக் கையாள் என்று என்னை நீங்களே சொல்லிவிட்டீர்கள்.... ஏன், எனக்கு உண்மையைச் சொல்ல என்ன பயம்? ஆம், சுகுணனுடைய காதல் மிகவும் உத்தமமானது என்பதை நான் அறிவேன். குணவதிக்குத் தக்க கணவன் சுகுணன் என்பதை நான் உணர்ந்துதான், அவர்களுடைய புனிதமான காதலுக்கு என்னாலான உதவியைச் செய்யத் துணிந்தேன். நான் மிருதுவான ஹிருதயம் படைத்தவள்.

நீலமேகம் : ஆஹா! மிருதுவான ஹிருதயம் படைத்தவளே! அதனால் தான் 'உண்ட வீட்டில் இரண்டகம்' செய்ய வந்தாயோ? சீ! ஸ்ரீராமனைக் காட்டுக் கனுப்பக் காரணமாக இருந்த மந்தரையின் அவதாரமே! காதகியே! கோட்டானே! போயும் போயும் உன்னை, என் பெண்ணுக்குக் காவலாக வைத்தேனே! என்னே என் மடத்தனம்!......... இனி என் கண்முன் நிற்காதே! இந்த க்ஷணமே, இந்த இடத்தைவிட்டு ஓடிப்போ.

ஜயம் : நீங்கள் என்னை வேலையை விட்டு நீக்குகிறவரையில் நான் காத்துக்கொண்டிருப்பேன் என்று நினைத்தீர்களோ? என் பெட்டி படுக்கைகளை எல்லாம் தயாராக எடுத்து வைத்துவிட்டேன், நானே போவதற்கு.

(தனக்குள்) கல் நெஞ்சம் படைத்த இதைப் போன்ற கிழங்களிடம் யார்தான் வேலை செய்ய

முடியும். (வெளிப்படையாக) குணவதியின் அறை யில் என் பெட்டியை வைத்திருக்கிறேன். எடுத்துக் கொண்டு போய்விடுகிறேன்.

நீலமேகம் : சீக்கிரம் போய்விடு.

(ஐயா போகிறுள்)

ஒழிந்தது மூதேவி! அப்பா! இந்த மாதிரி பெண் களும், இந்த மாதிரி வேலைக்காரர்களும் ஒருவ னுக்கு இருந்தால் போதுமப்பா போதும். வேறு நரகம் வேண்டாம். எதற்காகத்தான் எல்லோரும், "பெண்பிள்ளை பிறக்கவேண்டும், பெண்பிள்ளை பிறக்க வேண்டும் என்று பிரயாசைப் படுகிருர் களோ தெரியவில்லை. புருஷப்பிள்ளைகளாக இருந் தாலோ, எப்படியாவது தொலைகிருர்கள் என்று இருக்கலாம். ஆனல் இந்தப் பெண்களோ! ...அப்பப்பா! ...சுமார் பதினைந்து வயது வந்ததும், எங்கிருந்துதான் அந்தத் தளுக்குகளும், குலுக்கு களும், கழுத்து வெட்டுகளும், கண் வெட்டுகளும், இடுப்பு வளைவுகளும், கோணல் மாணல்களும் வருகின்றனவோ, தெரியவில்லை. கூட இரண்டு வருஷங்கள் கடப்பதற்குள், காதல் கடிதங்கள் வரத்துப்போக்கு, கள்ளத்தனமான சதிகள்...... அப்பப்பா! இருபது வருஷங்களுக்கு முன்னல் இப் படி இல்லவே இல்லை. இப்பொழுதே இப்படி இருக் கின்றதே! இன்னும் இருபது வருஷங்கள் கடந் தால், என் பேத்திகள் எப்படி இருப்பார்களோ? கடவுளுக்குத் தான் வெளிச்சம்.

(குணவதி, ஐயாவின் மாறுவேடத்தில் பெட்டியுடன் வருகிருள். மேடை யில் குறுக்கே செல்லுகிருள்.)

அப்பா மூதேவி ஒழிந்தது. இனியாவது என் மகளை நான் ஜாக்கிரதையாகப் பாது காக்க வேண்டும். வாயைக் கூடத்திறக்காமல் போகின்றாளே, அடா! எனக்கு மட்டும் சக்தி யிருந்தால் உன்னை ஊமை யாகப் போகும்படி சாபம் கொடுத்திருப்பேனே! குடியைக் கெடுக்க வந்த கோடாரிக் காம்பே! இங்கே திரும்பாதே! ஓடு, ஓடு.

(குணவதி ஜயாவின் வேஷத்தில் போகிறாள். நீலமேகம் பிள்ளை போகிறார். திரை விழுகிறது.)

★

காட்சி 3.

இடம் : நந்தவனம்

காலம் : மாலை

(குணவதி வருகிறாள்)

குணவதி : நல்ல வேளையாக இவ்வளவு தூரம் தப்பித்துக் கொண்டு வந்து விட்டேன். என் தந்தை, என்னை ஐயா என்று தான் இன்னமும் நினைத்துக் கொண்டிருக்கிறார். இதனால் எனக்கு மிகவும் சாதகம் தான். ...ஆ! பேசும் குரல் கேட்கின்றதே...! மறைவாக இருந்து கவனிக்கிறேன்.

(குணவதி மறைந்து கொள்ளச் சுந்தரியும் அவள் தோழி ஸரஸாவும் வருகிறார்கள்.)

ஸரஸா : அம்மா! எங்கே இப்படியே போய்க் கொண்டிருக்கிறீர்கள்? வீட்டை விட்டு ஒருவருக்கும் தெரியாமல் வெளியேறி விட்டீர்கள். அர்த்தமில்லாமல் கண்டபடி நடந்து கொண்டிருப்பதில் என்ன பிரயோஜனம். வாருங்கள். என் வீட்டிற்காவது போய் ஒருவருக்கும் தெரியாமல் ஒளிந்து கொண்டிருக்கலாம்.

சுந்தரி : வேண்டாம். உன் வீட்டிற்குப் போனால் உடனே என் தகப்பனாருக்குத் தெரிந்து விடும். உடனே என்னை அந்த மார்த்தாண்டத்திற்குப் பலாத்காரமாகக் கட்டிக் கொடுக்க முயற்சி செய்வார்கள். என் மாற்றாந்தாயின் தம்பியாக இருந்தால் என்ன நான் அவரைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று சட்டமா இருக்கிறது? ஹூம்.

ஸரஸா : உண்மைதான். சுந்தரத்தின் உதவியைக் கொண்டு எப்படியோ வீட்டை விட்டு வெளியேறி விட்டீர்கள். இனி சுந்தரத்தைக் காணவோ அல்லது அவருக்கு ஏதாவது செய்தி சொல்லி அனுப்பவோ வேண்டாமா?

சுந்தரி : ஆம் ஸரஸா! சுந்தரத்தை நான் எவ்வாறு காண்பது? எவ்வாறு அவருக்கு நான் செய்தி அனுப்புவது? இரண்டும் முடியாத காரியம். அவராக என்னைக் காணும் வரை நான் தவம் செய்து கிடக்க வேண்டியது தான்.

குணவதி : (தனக்குள்) என்னைப்போல், என் சினேகிதி சுந்தரியும் வீட்டை விட்டு வெளியேறி விட்டாளா! எனக்கு ஒரு கார்மேகம் முளைத்தாற் போல் அவளுக்கு ஒரு மார்த்தாண்டம் முளைத்தான் போலிருக்கிறது. நானும் என் காதலர் சுகுணனை எப்படி, எங்கே சந்திப்பது என்றுதான் திகைத்துக் கொண்டிருக்கிறேன்.

ஸரஸா : அம்மா சுந்தரீ, உங்கள் சினேகிதி குணவதி இருக்கிறார்களே, அவர்கள் உங்களுக்குக் கட்டாயம் உதவி செய்வார்கள். சுந்தரத்தைச் சந்திக்கும் வரையில் குணவதியின் வீட்டிலேயே மறைவாக இருக்கலாமே.

சுந்தரி : அதெப்படி முடியும் ஸரஸா! காதலுக்காக நான் வீட்டைவிட்டு ஓடி வந்து விட்டேன் எனத் தெரிந்தால் குணவதி என்னை மதிக்கவே மாட்டாள். அவளுக்கும் ஒரு காதலன் இருந்து சிருங்கார இன்ப துன்பங்களையும் அனுபவித்திருந்தால் தானே தெரியப்போகிறது? வேறு எங்கே போகலாம்?

குணவதி : (தனக்குள்) இதென்ன! விந்தையாக இருக்கிறதே! நான் வீட்டை விட்டு ஓடி வந்து விட்டது சுந்தரிக்குத் தெரிந்தால் அவள் என்னை மதிக்க மாட்டாள் என்று நான் நினைக்க, அவளே என்னை முந்திக் கொண்டு விட்டாளே! ஆம்! உலகம், எங்கும் ஒரே விதம் தான் போலிருக்கிறது. நான் சுந்தரியிடம் சென்று எல்லா விஷயங்களையும் அவளுக்குத் தெரியப் படுத்தி அவளுடைய உதவியை நாடுகிறேன்,

(வெளிப்படையாக) சுந்தரீ! சுந்தரீ!.........நீ எப்படி இங்கு...தனியாகவா வந்தாய்?......கூட இருப்பது தோழி ஸரஸாவா?

சுந்தரி : ஆம், ஸரஸா தான்.......அது போகட்டும். நீ எப்படி இங்கு வந்தாய்? தனியாகவா வந்திருக்கிறாய்? மாறு வேடம் கூட அணிந்து கொண்டிருக்கிறாயே, என்ன சமாசாரம்?

குணவதி : நான் சொல்வதைக் கேட்டு ஆச்சர்யத்தினால் பயப்பட்டு விடாதே! நான் என் வீட்டை விட்டு ஒருவருக்கும் தெரியாமல் ஓடி வந்து விட்டேன்.

சுந்தரி : ஓஹோ! அப்படியா! நன்றாக இருக்கிறது. நன்றாகக் கோபித்துக் கொண்டு, உன்னை நான் உன் தகப்பனாரிடம் காட்டிக் கொடுத்திருப்பேன். ஆனால் இப்போது, நீ செய்தாற் போல் நானும் என் வீட்டை விட்டு ஓடி வந்து விட்டேன்!

குணவதி : என் அன்புக்குரிய சுந்தரி!

சுந்தரி : ஆ! என் குணவதி! இன்னுயிர்த் தோழி!

(இருவரும் ஆலிங்கனம் செய்து கொள்கிறார்கள்.)

குணவதி! நீ எங்கே போகப் போகிறாய், இப் பொழுது?

குணவதி : என் காதலனைச் சந்திக்கத்தான். என் அண்ணா வைச் சந்திக்க உனக்கு எவ்வளவு ஆவல் உண்டோ, அதே ஆவல் எனக்கு, என் அன்பரைச் சந்திக்க இருக்காதா?

சுந்தரி : ஆம். உண்மை தான். ஆனால் உன் அண்ணா கொஞ்சம் கூடத் தயா தாக்ஷண்யம் இல்லாதவர். அவரை ஒருகாலும் மன்னிக்க மாட்டேன்.

குணவதி : ஏன்? அவர் என்ன செய்தார்?

சுந்தரி : அவர் என்ன செய்தாரா? சொல்வதற்கு......

குணவதி : என்னிடம் சொல்ல என்ன தயக்கம்? சொல்லு சுந்தரி.

சுந்தரி : நேற்றிரவு நிலவு பால் போல் எங்கும் படர்ந் திருந்தது. தென்றலும் ஆனந்தமாக வீசிக் கொண் டிருந்தது. மலர்களின் மணம் யாவரையும் மெய்ம் மறக்கச் செய்து, காற்றில் மிதந்து செல்வது போல் உணர்ச்சியைக் கொடுத்துக் கொண்டிருந்தது. ஆனால், என் அன்பர் என் அருகே இல்லாததால் நிலவு, என் தேகத்தைச் சூரியனைப் போல் தகிக்க ஆரம்பித்து விட்டது. தென்றல் என் தேகத்தில் பட்டதும் ரம்பத்தால் என்னை நாலாப் பக்கங்களி

லும் அறுப்பது போல் இருந்தது. மலர்களின் மண மோ எனக்குச் சகிக்க முடியாத வேதனையைக் கொடுத்துக் கொண்டிருந்தது. இவ்வாறு நான் வேதனைப்பட்டுக் கொண்டிருப்பதை உன் அண்ணா, என் கண்களுக்குப் படாமல் ஒரு மரத்தின் பின்னால் மறைந்திருந்து கவனித்துக் கொண்டிருந்து விட்டு, மெள்ளமாக என் பின் வந்து என் கண்களைப் பொத்தினார். நான் திடுக்கிட்டு எழுந்து ஒரு புற மாக நின்று கொண்டேன். இதைக் கண்ட அவர் வாய்விட்டுச் சிரித்துக் கேலி செய்தார். உள்ளூற எனக்குச் சந்தோஷம் பொங்கி வந்த தென்றாலும், கோபம் வந்தது போல் பாவனை செய்தேன். அவர் அருகில் வந்து மன்னிப்புக் கேட்டுக் கொள்வார் என்று நான் எதிர்பார்க்க, அவர் திடீரென்று என்னை அணைத்து...... உடனே எனக்கு விருப்ப மில்லாதது போல் நடித்து, நானே அவரிட மிருந்து என்னை விடுவித்துக் கொண்டு விட்டேன். அவருக்கு ஏதாவது தயா தாக்ஷண்யம் இருந்தால் என்னை அப்படி விட்டுவிட்டிருப்பாரா? இந்தப் புருஷர்களுக்கு, ஸ்திரீகளுடைய ஹிருதயத்தைப் பற்றி ஏதாவது தெரிந்தால் தானே!

குணவதி : ஆம், சுந்தரி. அது உண்மையிலும் உண்மை. என் அண்ணாவை நீ அவசியம் மன்னிக்கவே கூடாது!...... நானும் அவனைக் கண்டித்து விடுவேன். ஆனால் நான் வீட்டை விட்டு ஓடி வந்த சமாசாரம் அவனுக்குத் தெரியக் கூடாது என்று தான் பார்க்கிறேன்...... ஆமாம் ...... நீ எங்கே போகப் போகிறாய், இப்போது?

ஸரஸா : (சுந்தரியிடம்)

அம்மா! அடுத்த ஊரில் என் அத்தை வசிக்கிருள். அங்கு நீங்கள் தங்கிஞல் ஒருவருக்கும் தெரியாது.

சுந்தரி : ஸரஸா! நல்ல யோசனை தான்....குணவதி! நீயும் என்னுடன் வந்துவிடுகிருயா? ஸரஸா யோசனை கூறியபடி அவள் அத்தை வீட்டில் தங்குவோம். பிறகு...

குணவதி : இல்லை, சுந்தரி! முதல் காரியமாக நான் என் அன்பர் சுகுணரைக் காணவேண்டும். அதற்கு நான் யாரையாவது தூது அனுப்பிவைத்து ......அடே!

(கார்மேகமும் சோமசுந்தரமும் வருகிருர்கள்.)

"கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது" போல், இதோ வருகிருனே! அவனையே என் அன்பரிடம் தூது செல்ல இப்போது அனுப்பப் போகிறேன்.

சுந்தரி : குணவதி! அவன் யார்? யாரோ புது முகமாக இருக்கிறதே. ஊருக்கே புதிதா?

குணவதி : ஆமாம்! ஊருக்கே புதிது தான். யார் தெரியுமா? அவன் தான் கார்மேகம். என் தகப்பஞர், அவருக்கு அருமை மருமகப் பிள்ளையாகத் தேர்ந்தெடுத்திருக்கும் பிரகிருதி. அவன் நடையையும், தோற்றத்தையும் கண்டால் வண்டிமாடு மாதிரி இருக்கிறது, பார்த்தாயா சுந்தரி. இவன் எனக்கு மாலையிடப் போகிறவன் என்று தெரிந்ததும், நான் வீட்டை விட்டு ஓடி வந்ததை யாராவது தவறு என்று சொல்லுவார்களா?

சுந்தரி : என்ன குணவதி ! அவனையா தூது அனுப்பப் போகிறாய்? உனக்கென்ன பைத்தியம் தலைக்கேறி விட்டதா? வேண்டாம் குணவதி. பாம்புப் புற்றில் யாராவது வேண்டுமென்று கையை விடுவார்களா?

குணவதி : அப்படியல்ல சுந்தரி! இந்தப் பாம்பு தான், மாணிக்கத்தை என்னிடம் சேர்ப்பிக்கப் போகின்றது. இந்தக் கார்மேகத்தையே, என்னிடம் சுகுணரைச் சேர்க்கும்படிச் செய்யப் போகிறேன். என் காரியம் ஜயமடைய வேண்டுமானால், இவனைத் தவிர வேறொருவராலும் முடியாது. ஹூம், என் தகப்பனார் விருப்பத்திற்கு இணங்கியிருந்தால் நாளைக்கு இந்த மிருகத்திற்கு மாலையிட்டவளாக அல்லவோ ஆகவேண்டும்? சுந்தரி! இந்த ஊரிலேயே இவன் ஒருவன் தான் என்னைப் பார்த்ததேயில்லை. அதனால் அவனுக்கு என்னை யாரென்று தெரியாது.

சுந்தரி: அப்படியானால் அவனை மட்டும் உனக்கு எப்படித் தெரியும்?

குணவதி : நேற்று என் தகப்பனாரைக் காண வந்திருந்தான். என் தோழி ஜயா என்னை ஜன்னல் வழியாகப் பார்க்கச் சொல்லி, அவனைச் சுட்டிக் காட்டினாள்.

சுந்தரி : அப்படியானால் சரி. எதற்கும் நீ முன் ஜாக்கிரதையாகவே இரு. நான் போய் வரட்டுமா?

குணவதி : சுந்தரி! போகுமுன் ஒரு வார்த்தை. எனக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றுகிறது. அவனுடன் பேசும் போது, நான் உன் பெயரை உபயோகித்துக் கொள்ளலாமா?

சுந்தரி : அதற்கு அவசியமானால் தாராளமாக என் பெயரை உபயோகித்துக் கொள். ஆனால் என்னை ஆபத்தில் மாட்டிவிட்டு விடாதே!

குணவதி : இல்லை, சுந்தரி. அப்படியொன்றும் நீ பயப்பட்டு விடாதே!

சுந்தரி : உம்... குணவதி! அண்ணா சுந்தரத்தை நீ ஒரு வேளை சந்திக்க நேர்ந்தால், நான் ஸரஸாவின் அத்தை வீட்டில் இருக்கிறேன் என்று சொல்லி விடாதே.

குணவதி : சரி, ஸரஸாவின் வீடு எங்கே இருக்கிறது?

சுந்தரி : கோவிலுக்கு அருகே, கிழக்கு மாடவீதி 8-வது வீடு.

குணவதி : ஓஹோ! அப்படியானால், என் அண்ணாவைக் கண்டதும் "அண்ணா, பக்கத்து ஊரில் கோவிலுக்கு அருகே கிழக்கு மாடவீதியில் 8-வது வீட்டில், சுந்தரி தன் தோழி ஸரஸாவுடன் தங்கியிருப்பதாக உன்னிடம் சொல்ல வேண்டாம் என்று சொன்னாள்" என்று அவசியமாக, மறக்காமல் முதற் காரியமாகச் சொல்லிவிடுகிறேன்.

சுந்தரி : குணவதி, கிழக்கு மாடவீதி, எட்டாவது வீடு, ஞாபகமிருக்கட்டும்.

குணவதி : சுந்தரி! நான் மறக்க மாட்டேன் போய்வா.

(சுந்தரியும் ஸரஸாவும் போகிறார்கள்.)

ஓஹோ! அப்படியா! கார்மேகம் என்னையே நோக்கி வருகிறாரே! ஏது? அன்ன நடை போட்டுக் கொண்டு மெய்ம் மறந்து நடந்து வருகின்றாரே! எனக் கென்னமோ இவர் காண்டாமிருகம் மாதிரி தான் தோற்றமளிக்கிறார். ஒரு வேளை காண்டா மிருகம் என்பதற்குப் பதிலாகச் சுருக்கமாகக் கார்மேகம் என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கிறாரா?

(சிரிக்கிறான்.)

கார்மேகம் : நண்பா, சோமசுந்தரம்! (ஒரு சிறு கண்ணாடியில் தன்னைப் பார்த்துக்கொண்டு மீசையைத் தடவிக் கொடுக்கிறான்). நான் தான் சொல்லியிருக்கிறேனே! இப்பொழுது நம்புகிறாயா! அதோ எதிரில் ஒரு அழகிய பெண்—ஆஹா! என்ன அழகு! என்ன அழகு! பார்த்தாயா? அந்தப் பெண் வாய்விட்டுச் சிரித்துக்கொண்டு என்னை ஜாடையாய் அழைக்கிறாள் பார். ஆஹா, அவளுடையமுகமலரின் எழிலாம் இன்னமுதுண்ணும் வண்டு நானாகவல்லவோ இருக்க வேண்டும்! இப்பொழுது பார். என் அழகிலும் காம்பீர்யத்திலும் அப்படியே சொக்கி விட்டாள்! அதற்காகத்தான் நான் அடிக்கடி நினைப்பதுண்டு! கடவுள் ஏன் என்னை இப்படி ஒரு ஸௌந்தர்ய புருஷனைப் படைத்தார் என்று......

சோமசுந்தரம் : ஆமாம். நீர் சொல்வது முற்றிலும் உண்மை ...உங்களுக்கே தெரியுமோ தெரியாதோ, உங்கள் மீசையின் அழகைக் கண்டதுமே எல்லாப் பெண்களும் சொக்கி விடுகிறார்கள். உங்கள் மீசையில் அல்லவோ இருக்கிறது எல்லா அழகும்! ஆனால் உங்களுக்கு மட்டும் பானையைப்போல் இவ்வளவு பெரிய தொந்தி இல்லாவிட்டால்...

கார்மேகம் : என்ன? என்ன?

சோமசுந்தரம் : ஒன்றுமில்லை! மன்மதனே உருவெடுத்துப் பூலோகத்திற்கு வந்து விட்டான் என்று ஏமாந்து விடுகிறார்கள், உங்களைக் கண்டதும்!

கார்மேகம் : சோமு! உன்னைக்கண்டு அந்தப் பெண்மான் நடுநடுங்கி என்னிடம் வரத் தயங்குகின்றது. நீ சற்று விலகி இரு. (தனக்குள்) நானே அவளருகில் செல்லலாமா? ஊஹூம். கூடாது. நான் அருகே சென்றால் ஒரு வேளை என்னை அவள் மோக வலையில் சிக்கவைக்க முயலுவாள். ஆனால் இதெல்லாம் நம்மிடமா பலிக்கும்! ஹூம், நல்ல வேளையாக என் மீது அதிமோகம் கொண்டு அவளே சுய நினைவை இழக்காமல் இருந்தால் போதாதா!

(கார்மேகம், குணவதியின் அருகில் செல்லுகிறான்.)

குணவதி : ஐயா! உங்களைப் பார்த்தால் ஒரு பெரிய மனிதரைப் போலத் தோன்றுகிறது!

கார்மேகம் : (தனக்குள்) அட! எவ்வளவு எளிதில் கண்டு கொண்டு விட்டாள், நான் ஒரு பெரிய மனிதன் என்று! மகா கெட்டிக்காரியாகத் தான் இருக்க வேண்டும் (வெளிப்படையாக) யாரம்மா நீ?

குணவதி : ஐயா! இந்த அனாதைப் பெண்ணுக்கு ஓர் உதவி செய்வீரா?

கார்மேகம் : (தனக்குள்) உதவியா? என்ன உதவி இருக்கப் போகிறது! ஆம், ஒரு பெண் ஒரு புருஷனுடைய உதவியை எதற்காக நாடுவாள். ஹ ஹா! ஹ ஹி! என்

னிடம் என்ன காந்த சக்தி இருக்கிறதென்று எனக்கே தெரியவில்லை! இவள் எவ்வளவு அழகு வாய்ந்த ரூபவதி! என் மோக வலையில் இவ்வளவு எளிதில் சிக்கி விட்டாளே! (வெளிப்படையாக) பெண்ணே! உன் பெயர் என்னம்மா?

குணவதி : (தனக்குள்) நல்லவேளை. நான் நினைத்தபடியே இவனுக்கு நான் யாரென்று தெரியாது போலிருக்கிறது. (வெளிப்படையாக) ஐயா! என் பெயர் சுந்தரி. ராஜரத்தினம் பிள்ளை, வைர வியாபாரி இருக்கிறாரே, அவருடைய மகள்.

கார்மேகம் : ஓகோ!... ஹ்ஹா! ஹ்ஹா! ஹா! ஹா! ராஜரத்தினம் பிள்ளையின் மகளா நீ! சுந்தரியா?... ஹ்ஹா! ஹா! ஹா! இப்போதுதான் சற்று நேரத்திற்கு முன்பு கேள்விப்பட்டேன், ராஜரத்தினம் பிள்ளையின் மகள் சுந்தரி ஓடி விட்டாள் என்று...உம் அவள் தானா நீ—ஹி...

குணவதி : ஐயா! அதனால் இந்தப் பேதைப் பெண்ணைக் காட்டிக் கொடுத்து விடமாட்டீரே. என் சுய நிலையை இழக்கச் செய்த என் காதல், என்னை வீட்டை விட்டே வெளியே போய் எப்படியாவது காதலனைச் சந்திக்கும்படித் தூண்டியது. அது என் தப்பாக எப்படி ஆகும்? நான் என் மனதிற்கிசைந்த ஓர் ஆடவனைக் காதலிப்பது தப்பா?

கார்மேகம் : தப்பே இல்லை! தப்பே இல்லை!! ஐயோ, பாவம்! உன்னைப்போல் ஓர் அழகிய பெண்ணைக் காட்டிக் கொடுத்துத் துன்புறுத்துவதில் எனக்கு என்ன சந்தோஷம். நான் மிகவும் தயா தாக்ஷண்யம் பொருந்தியவன். மேலும், நான் உன்னை உன் தகப்பனாரிடம்

காட்டிக் கொடுப்பதால் எனக்கு என்ன லாபம்? ஒன்றுமில்லை! அதனால், நீ பயப்படவே பயப்படாதே! உன் காதலை நான் மிகவும் மெச்சுகிறேன்.

ஆனால்.......!

குணவதி: ஆனால் என்ன?

கார்மேகம்: அது தான்; உன்னுடைய காதலைப் பற்றிய வரையில் உனக்கு எவ்வாறு உதவி செய்வது என்று எனக்கு ஒரு வழியும் தோன்ற வில்லை.

குணவதி: ஏன் ஐயா, தயாள நிதியே?

கார்மேகம்: ஏனென்றால், நான் வேறொரு பெண்ணிடம் அவளைக் கல்யாணம் செய்து கொள்வதாக வாக்களித்து விட்டேன். அதனால் தான்— நீ என்மேல் கொண்டிருக்கும் காதலைப் பற்றிய வரையில்.......

குணவதி: ஐயா! நான் சொல்வதை முழுவதும் கேளாமல்,...

கார்மேகம்: முடியாது; கேட்கவே முடியாது. நான் சொல்வதை நீ நன்றாகக் காதில் வாங்கிக் கொள் முதலில். நான் உன்னை நியாயமான முறையில் காதலிக்க முடியாது. இரண்டாவதாக, நான் இப்போது இசைந்தேனானால், உனக்குச் சகோதரர்கள் யாராவது இருந்து, அவர்கள் இதை அறியவந்தால் அப்புறம் என் உயிருக்கே ஆபத்து தான். அதனால் நீ என் மேல் கொண்டிருக்கும் காதலை மறந்து விடு.

குணவதி: (தனக்குள்) நீசனிலும் நீசன், காமாந்தகன், சண்டாளன்! என்ன தகாத வார்த்தைகளை யெல்லாம் சொல்லத் துணிகிறான்! ஆனால் என்ன செய்வது! என் காரியம் ஆகவேண்டுமே! (வெளிப்படையாக)

அன்புள்ள ஐயா! நான் காதல் கொண்டிருப்பது சுகுணர் என்று பெயர் கொண்ட என் அன்பரின்பேரில்தான். அவரை அடையவேதான் வீட்டை விட்டு ஒருவருக்கும் தெரியாமல் ஓடி வந்து விட்டேன். அதற்காகவே தான் உங்கள் தயவையும் நாடுகிறேன்.

கார்மேகம்: (கோபம் கொண்டு) என்ன! என்ன! எப்படி? அப்படி யென்றால் நீ என் மேல் காதல் கொள்ள வில்லையா?

குணவதி: இல்லவே இல்லை! நான் அப்படிச் சொல்லவே இல்லை!

கார்மேகம்: சொல்லவே யில்லையா? மோசக்காரி! இப்படி மோசம் செய்வாய் என்று தெரிந்திருந்தால், நான் அப்போதே உன் தகப்பனாரிடம் காட்டிக் கொடுத்திருப்பேனே. உன்னைப் போல, இவ்வளவு முன் போக்குள்ள, அதிகப் பிரசங்கித்தனமான, கூச்ச மில்லாத பெண்ணை நான் பார்த்ததே இல்லை. அவசியம் உன்னை உன் தகப்பனாரிடம் காட்டிக்...

குணவதி: இதுதானா உங்கள் ஆண்மைத்தனம்? ஏன் ஐயா, இப்பேர்ப்பட்ட நம்பிக்கைத் துரோகம் செய்யத் துணியும் உம்மை, எனக்குப் பழிக்குப் பழி வாங்கத் தெரியாது என்று நினைத்துக் கொண்டீர்? மற்ற ஆடவர்களுக்குத் திருஷ்டிப் பரிகாரமாக மரம் போல் நிற்கிறீரே?

கார்மேகம்: பதற வேண்டாம்! பதறவேண்டாம்! நான் கேலியாக வார்த்தையாடினால் அதை நிஜம் என்று நம்பி விட்டாயே! ஆமாம். (யோசனையில் ஆழ்ந்தவன் போல்) சுகுணர் என்பவன்தானே உன் காதலன். அவனைத்தானே குறித்தாய் நீ?

குணவதி : ஆம் ஆம்; சுகுணரைத்தான் நான் நேசிக்கிறேன் சுகுணரை எப்படியாவது கண்டு என்னிடம் அனுப்பி வைத்தால்......

கார்மேகம் : (தனக்குள்) கார்மேகத்தின் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்! நான் குணவதியை அடையும் விஷயத்தில் சுகுணன் குறுக்கே நிற்கிறுன். இந்தச் சுந்தரியை அவனிடம் சேர்த்து விட்டால்........

(வெளிப் படையாக)

ஹா ஹா ஹ ஹா !

குணவதி : ஏன் சிரிக்கிறீர்கள் ?

கார்மேகம் : ஒன்றுமில்லே! கட்டாயமாகச் சுகுணனே உன்னிடம் அனுப்பி வைக்கிறேன். சுந்தரீ, இனி நீ சஞ்சலப் படாதே. இதோ! இப்போதே என் தோழனிடம் சொல்லி வரவழைக்கிறேன் சுகுணனே.

(சோமு கூப்பிடுகிறுன்; கார்மேகம் சோமுவிடம் செல்கிறுன்.)

சோமு! ஒரே அடியில் இரண்டு காரியங்களேச் சாதித்து விட்டேன்.

சோமு : அதென்ன? அதிசயமாக இருக்கிறதே.

கார்மேகம் : கேளப்பா சோமு! எனக்குப் போட்டியாகக் குணவதியைக் கல்யாணம் செய்து கொள்ள யத்தனிப்பவன், சுகுணன்.

சோமு : ஆமாம்!

கார்மேகம்: அந்தச் சுகுணன் பேரில் இந்தச் சுந்தரி காதல் கொண்டிருக்கிறாள். அதனால் சுகுணனை இந்தச் சுந்தரியிடம் சேர்த்து விட்டால், முதலாக இந்தப் பெண்ணுக்கு உதவி செய்தது போலும் இருக்கும். இரண்டாவதாக, சுகுணனை என் வழியிலிருந்து விலக்கினது போலும் இருக்கும். அப்போது குணவதி எனக்குத்தான். இனி போட்டிக்கு ஒருவரும் கிடையாது. எப்படி? இந்தக் கார்மேகத்தின் சிறிய மூளை எவ்வளவு கூர்மையாக வேலை செய்கிறது பார்த்தாயா?

சோமு: ஆமாம், ஆமாம்; அபார மூளை. அபார மூளைதான்.

கார்மேகம்: ஆமாம்; இந்தக் கார்மேகத்தின் சிறு மூளையின் கூர்மையான வேலையே வேலை. என்ன சோமு! இந்தக் கார்மேகம் ஒரு பெரிய கள்ளப் போக்கிரி, இல்லை?

சோமு: ஆமாம். ஆமாம்! உங்களுடைய புத்திசாலித்தனம் யாருக்குத்தான் தெரியப் போகிறது! உண்மைதான். பெரியோர்கள் தங்கள் ஆயுட் காலத்தில் புகழடைவது துர்லபம். அவர்கள் இறந்ததும்தான் புகழ் மாலையைச் சூட்டுகிறார்கள். ஆதலால் நீங்கள் உயிரோடிருக்கும் வரையில்......

கார்மேகம்: சுந்தரீ! என் தோழன் சோமசுந்தரம் உனக்கு வேண்டிய உதவியைச் செய்வான். நீ அவன் கூட என் வீட்டிற்குச் சென்று, சுகுணன் வரும் வரையில் அங்கேயே தங்கி இரு.

குணவதி: (சோமுவைப் பார்த்து) என்னை நம்பிக்கைத் துரோகம் செய்ய மாட்டீர்களே?

சோமு : அம்மா! என்னை முற்றிலும் நம்புங்கள். நான் இதுகாறும் ஒருவரையும் துரோகம் செய்ததில்லை.

கார்மேகம் : சோமு, அவளை என் வீட்டிற்கு அழைத்துச் செல்; நான் உடனே நீலமேகம் பிள்ளையைப் பார்க்கச் செல்ல வேண்டும்.

குணவதி : நீலமேகம் பிள்ளையையா, அல்லது குணவதியையா?

கார்மேகம் : (தனக்குள்) என்ன பொறுமை! (வெளிப்படையாக) சுந்தரீ, உனக்குக் குணவதியைத் தெரியுமா? ஆஹா! என்ன அழகு! என்ன சௌந்தர்யம்! அவள் அழகைப் பற்றி இன்றைக்கெல்லாம் கனவு கண்டு கொண்டு இருந்தாலும், பசி, தாகம் ஒன்றும் என் கனவைக் கலைக்காது. அவளைத்தான் நான் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறேன். இந்தக் கார்மேகம் அதிர்ஷ்டசாலியா இல்லையா, நீயே சொல்.

குணவதி: உண்மையே! உங்களைப் போல் அதிர்ஷ்டசாலி இந்த உலகிலேயே இருப்பார்களோ, என்னவோ? ஆமாம், குணவதியின் அழகைப்பற்றி இவ்வளவு ஆவேசத்துடன் வர்ணிக்கிறீர்களே! அவளைப் பார்த்திருக்கிறீர்களா?

கார்மேகம் : இல்லை. ஆனால், அவளுடைய அதிரூப ஸௌந்தர்யத்தைப் பற்றி அடிக்கடி கேள்விப் பட்டிருக்கிறேன். அதுவே எனக்கு மயக்கத்தை ஊட்டுகிறதே.

குணவதி : ஏன் ஐயா! என்னை விடக் குணவதி மிகுந்த அழகோ?

கார்மேகம்: உன் மனதைப் புண்படுத்துவதற்கு மனமில்லை. ஆனாலும், அவளுடைய அழகில் உனக்கு நூற்றிலொரு பங்காவது இருக்குமா என்பது என் எண்ணம்.

குணவதி: உங்களுடைய ரஸிக உள்ளத்தின் விதரணை பட்ச பாதமற்றதாக இருக்கிறதென்பதை அறிய, நான் சந்தோஷமடைகிறேன். ஆனால்!.....

கார்மேகம்: 'ஆனால்' என்ன, சுந்தரி!

குணவதி: அந்த நீலமேகம் பிள்ளை தன் மகளின் அழகைப் பற்றிக் கொஞ்சம் அதிகமாகவே புகழ்ந்து விடுவார். "காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு" தானே!.......உம்......அதை நம்பிக்கொண்டு—— உம்...குணவதியை அப்படி ஒன்றும் அழகில்லை என்று சொல்வதற்கில்லை. அவளை நீர் பார்த்திரானால், கொஞ்சம் அதிகமாக வயது ஆனவள் போல் தோற்ற மளிப்பாள். ஆனால் நீலமேகம் பிள்ளை அவளுக்கு வயது பதினெட்டுதான் என்று சாதிப்பார்.

கார்மேகம்: (சோமுவிடம்) பார்த்தாயா சோமு! அவளுடைய பொறுமையை!—— எப்போதும் இந்த அழகிய பெண்கள், மற்ற அழகிய பெண்களைப் பற்றி ஏதாவது குற்றம் குறை கூறாமலிருக்க மாட்டார்கள். (வெளிப்படையாக) சோமு! நீ சுந்தரியை உடனே வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போய் விட்டு விட்டு, எப்படியாவது சுகுணனைக் கண்டு அவனைச் சுந்தரியிடம் சேர்த்து விடு. என் உளம் குணவதியைக் காணத் துடித்துக் கொண்டிருக்கிறது. சுந்தரி, நான் சென்று வருகிறேன். சோமு! நீ சென்று வா.

குணவதி: சென்று வாருங்கள். கருணைக் கடலே!
(எல்லோரும் போகிறார்கள். திரை விழுகிறது.)

★

காட்சி-4

இடம் :— நீலமேகம்பிள்ளை வீடு. கூடம்.

காலம் :— காலை.

(கார்மேகமும் நீலமேகமும் தோன்றுகிறார்கள்.)

நீலமேகம்பிள்ளை : *ஹ் ஹா ! ஹ் ஹ் ! ஹா ஹா ! தகப்பனை விட்டு ஓடிவிட்டாளா ? ஹ் ஹ ஹ் ஹா ! ஹ ஹா ராஜ ரத்தினம் பிள்ளையை இவ்வளவு எளிதில் ஏமாற்றி விட்டாளே ! ஹ் ஹா ! ஹா ! ஐயோ பாவம், ராஜரத்தினம்பிள்ளை !*

கார்மேகம் : *இந்த அதிசயம் தெரியுமா உங்களுக்கு? சுந்தரி இருக்கிறாளே, அவளே என்னைத் தனியாகச் சந்தித்துச் சுகுணனைக் காதலிப்பதாக என்னிடம் சொன்னாள். இதை அறிந்ததும் பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல் இருந்தது எனக்கு. அதனால் நான் முன்யோசனையாக, என் நண்பன் சோமசுந்தரத்தினிடம் சொல்லியிருக்கிறேன், முதற் காரியமாக, சுகுணனைக் கண்டு பிடித்து அவனை எப்படியாவது சுந்தரியிடம் சேர்த்து விடும்படி. எப்படி என் சாமர்த்தியம்! இனி அந்தச் சுகுணன் குணவதி யிருக்கும் திக்குக்கே திரும்ப மாட்டான். நமக்கும் அனாவசியமான தொந்தரவுகளையும் கொடுக்க மாட்டான். எப்படி? இந்தக் கார்மேகத்தின் சிறிய மூளை எவ்வளவு கூர்மையாக வேலை செய்கிறது, பார்த்தீர்களா ?*

நீலமேகம் : *கார்மேகம்! நல்ல காரியம் செய்தாய். நீ விரித்திருக்கும் வலையில் சுகுணன் விரைவில் விழுந்து*

50820

விடுவான். இனி கவலைக்கிடமேது? ஹ் ஹா...! நினைத்தாலே பாவமாக இருக்கிறது. ராஜரத்தினம் பிள்ளை சுத்த கையா லாகாதவர். தன் பெண்ணை அடக்கச் சக்தி இல்லை. ஹே! ஏ !!

கார்மேகம்: என்ன நீலமேகம் பிள்ளை! பெண்களைப் பற்றி இவ்வளவு எளிதாகப் பேசி விட்டீர்களே! இந்த நாட்களில் பெண்கள் எவ்வளவுக்கெவ்வளவு அழகில் சிறந்து விளங்குகிருர்களோ, அவ்வளவுக் கவ்வளவு புருஷர்களை ஏமாற்றுவதில் குள்ள நரிகளை விடச் சமர்த்தர்களாக இருக்கிருர்கள். பாவம், சாதுவான ராஜரத்தினம் பிள்ளை ஏமாருமல் என்ன செய்வார்?

நீலமேகம்: ஹே! ஒரு மந்த புத்தியுள்ள ஆட்டைத்தான் நரி ஏமாற்ற முடியும். ஏன்! ஒரு புலியை அவ்வளவு சுலபமாக ஏமாற்றுகிறதுதானே? ஹூம்!

கார்மேகம்: ஹா! ஹா !! உங்களை யாராவது ஏமாற்றக் கனவிலும் கூட நினைக்க முடியாது.

(தனக்குள்) நான் இவன் பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டு இவன் பணத்தை அடித்துக் கொண்டு போகலாம் என்று வந்திருக்கிறேன். இவன் ஏமாறுவதில்லையாம்; புலிக் குட்டியாம்.

நீலமேகம்: ஆமாம்! என் பெண் குணவதி இருக்கிருளே! அவள் என்ன, அழகில் குறைந்தவளா? அல்லது புத்திசாலித் தனத்தில் தான் தாழ்ந்தவளா? ஏன் அவளால் என்னை ஏமாற்ற முடியவில்லை? உம். எல்லாம் தகப்பன் கையில் இருக்கிறதப்பா, தம்பி! கார்மேகம்! மகுடியைச் சரியாக வாசித்தால், எந்த நல்ல பாம்பும் தீண்டாது. ஆனல் சரியாக வாசிக்கா விட்டால், ஆபத்து தான்.

கார்மேகம் : ஆமாம். நீர் சொல்வது, மிகவும் உண்மையே நான் மட்டும் என்ன, ஏமாந்தவனு? உங்களைப் போல ஒரு புலிக்கு மருமகப் பிள்ளையாகப் போகும் புலிக் குட்டியல்லவா நான்! எந்தக் குள்ள நரியும் இந்தப் புலிக் குட்டியின் எதிரில் வர நடுங்க வேண்டும். நான் மருமகனை வாசிக்க ஆரம்பித்தால், பாம்பு படமெடுத்தாடாது; பயந்து ஓடி ஒளிந்து கொண்டு விடும்! நீலமேகம் பிள்ளை, என்னைப் பற்றி என் பாட்டி அடிக்கடி சொல்லுவாள், “இந்தக் கார் மேகத்தை எப்பேர்ப்பட்டவனும் ஏமாற்ற முடியாது” என்று.

நீலமேகம் : ஹா! ஹா! என்ன வென்றாலும் இந்த ராஜ ரத்தினம் பிள்ளை இவ்வளவு பெரிய ஏமாந்த சோணகிரியாகப் போய்விடுவார் என்று நான் கனவிலும் நினைக்க வில்லை.

கார்மேகம் : ஹா! ஹா! என்னவென்றாலும் இந்தச் சுகுணன் இவ்வளவு பெரிய ஏமாந்த சோணகிரியாகப் போய் விடுவான் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை.

நீலமேகம் : ஆமாம் ஆமாம்! மருமகப் பிள்ளை! இரண்டும் ஏமாந்த சோணகிரிகள் தான். ஏமாந்த சோணகிரிகளுக்கு என் வீட்டில் இடம் கிடையாது......ஆமாம், ...தம்பி கார்மேகம்! மேலே ஆக வேண்டிய காரியத்தைக் கவனிக்காமல்.. ... ஏது! என் மகளைப் பார்க்க வந்து விட்டு அதை மறந்து விட்டே நிற்கிறாயே?

கார்மேகம் : அப்படியொன்றுமில்லை; தாங்கள் பேசிக் கொண்டேயிருக்கும் போது குறுக்கிடுவானேன் என்று தான் பார்த்தேன். சரி. தாங்களும் என்

கூட வந்து குணவதிக்கு என்னை அறிமுகம் செய்து வைக்கிறீர்களா?

நீலமேகம் : குணவதி, என் மகளாக இருந்தாலும், அவள் சண்டித்தனத்தை விட்டுவிட்டு என்னிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிற வரையில், அவளுடன் பேசுவதில்லை, அவளைப் பார்ப்பதில்லை என்று சபதம் செய்து விட்டேன். ஆதலால், நீயே என் மகளை நேரில் கண்டு, அவளுடைய அன்புக்குப் பாத்திரமாக ஆகும்படி நடந்து கொள்.

கார்மேகம் : நான் எப்படி அவளைத் தனியாகச் சந்திப்பது? (தனக்குள்) அழகிய பெண்களைக் கண்டதுமே என் சப்த நாடிகளும் ஒடுங்கி விடுமே! கண்கள் மங்கி விடும்! காதுகள் மந்தமாகிவிடும்! வாய் குழறி விடும்! மூச்சு நின்று விட்டாலும் நின்று விடும்! ......அதனால் என் சொந்த அனுபவத்தில் அழகே யில்லாத பெண்களுடன் பேசும் போது ஒரு வித தைரியம் என்னை அறியாமலேயே எனக்கு உண்டாகிறது.

நீலமேகம் : தம்பீ, கார்மேகம்! பயப்படாதே! குணவதியைக் கண்டதும், உன் ஜீவனுக்குப் புத்துயிர் பிறக்கும்.

கார்மேகம் : அப்படியா!

நீலமேகம் : ஆமாம்!...... எப்படி யிருந்தாலும் அவளுடைய அழகு உன்னை ஒரு கண நேரம் மதி மயங்கச் செய்துவிடும். "என்னடா! தன் பெண்ணைப் பற்றிப் புகழ்ச்சி செய்கிறானே" என்று நினைக்க வேண்டாம். உண்மையைச் சொல்வதில் தப்பு ஒன்றுமில்லையே! கார்மேகம்...அவளுடைய கண்களைப் பார்த்தால், என்னுடைய கண்களைப் போலவே

இருக்கும். அகன்றதாகவும், கறுப்பாகவும் இருக்கும். நீயே வேண்டுமானால் நன்றாகக் கவனித்துப் பார். அவள் கண்களில் ஒரு விதக் குறு குறுப்பும்......புத்திசாலித் தனத்தின் அடையாளங்களும் ஜொலிக்கும். அதிலிருந்தே அவள் என் பெண் என்று தெரிந்துவிடும்.

கார்மேகம்: (தனக்குள்) அடே! நமக்கு மேலே பலே போக்கிரியாக இருக்கிறானே!

நீலமேகம்: தம்பி, அவளுடைய கன்னங்களைக் கவனித்தால் அந்தக் கன்னச் சிவப்பு, ரோஜா மலர் இதழ்களின் வர்ணத்தைப் பழிக்கும். அது மட்டுமா! அவள் சிரிக்கும்போது, கன்னத்தில் ஒரு குழி விழும்! வலது பக்கத்திலா? அல்லது இடது பக்கத்திலா?— அடடா, எனக்கே மறந்துபோய் விட்டதே. சரி, தம்பி! நீயே பார்த்து எனக்குச் சொல். குழி விழுந்த கன்னம் அழகாக இருக்கின்றதா, அல்லது குழி விழாத கன்னமா?......ஹா, ஹா! உன்னால் நிச்சயமாகச் சொல்ல முடியாது என்று இப்பொழுதே சொல்லி விடுகிறேன்.

கார்மேகம்: (தனக்குள்) ஆள் நமக்கே பாடம் கற்பிப்பான் போல் இருக்கிறதே!

நீலமேகம்: அவளுடைய மிருதுவான தேகத்தின் ஸ்பரிசம் பட்ட மாத்திரத்தில் வாடிப் போன எந்த மலரும் மலர்ந்து விடும்.

கார்மேகம்; (தனக்குள்) இந்த நீலமேகம் தன் பெண்ணைப் பற்றி இவ்வளவு அனுயாசமாக வர்ணிக்கிறானே; குணவதி இந்த ஊரிலேயே அழகிற் சிறந்தவள் என அநேகம் தடவை கேள்விப்பட்டிருக்கிறேன். இந்த நீலமேகத்தின் சொத்தின் பேரில் தான் நான் காதல் கொண்டிருக்கிறேன் என்பது உண்மையாக இருந்தாலும், இப்பேர்ப்பட்ட அழகு

வாய்ந்த குணவதியை நான் கண்டு சம்பாஷிக்க இனி ஒரு கணமும் தாமதிக்கக் கூடாது. (வெளிப் படையாக) நீலமேகம் பிள்ளை! குணவதியின் குரல் எப்படி! நன்றாகப் பாட, ஆட............

நீலமேகம்: அவள் குரலா?......ம்...... ஹா! ஹா! குயிலின் இனிமை என்றால் மிகை ஆகாது. அவள் பாட ஆரம்பித்தால், காற்றிலே மெள்ள அசைந்தசைந்து செல்லும் கீதம் போல் மனிதர்களையும் மிருகங்களை யும் சிறிது நேரம் மெய்ம் மறக்கச் செய்து விடுவாள்...உம்...தம்பி! போதும் என் புகழுரை. வா, அவள் அறைக்கு அழைத்துச் செல்லுகிறேன்.

கார்மேகம்: (தனக்குள்) இப்பேர்ப்பட்ட அழகும் குணமும் உடைய பெண் என்னை ஏற இறங்கக் கூடப் பார்க்க மாட்டாள். எதற்கும் ஓரமாகவே ஒதுங்கி நின்று, அவளாக என்னோடு பேசுகின்றாளா என்று பார்க் கப் போகிறேன்.

நீலமேகம்: தம்பி! கார்மேகம்! இனி எல்லாம் உன் கையில் தான் இருக்கிறது. அவளை நீ எப்படியாவது உன்னை நேசிக்கும்படிச் செய்து, "கல்யாணம் செய்து கொள்கிறேன்" என்ற வாக்கு மூலத்தை யும் வாங்கிக் கொண்டு, தாமதிக்காமல் என்னிடம் வந்து சொல். அது வரையில் என் மனது நிலையே கொள்ளாது. போய் வா.

கார்மேகம்: அப்படியே ஆகட்டும்......உம்...ஒருவேளை என் நண்பன் சோமு என்னைத் தேடிக் கொண்டு வந்தால், அவனை உடனே என்னிடம் அனுப்பி வையுங்கள்.

நீலமேகம்: சரி; ஆகட்டும்! நீ சீக்கிரம் போ.

(நீலமேகமும் கார்மேகமும் போகிறார்கள். திரை விழுகிறது.

காட்சி—5

இடம் : குணவதியின் அறை.

காலம் : காலை

(நிலைக் கண்ணாடிக்கெதிரில், ஜயா, குணவதியின் உடையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். கார்மேகம் வருகிறான்.)

கார்மேகம் : (தனக்குள்)

அடே! அந்த நிலைக் கண்ணாடியின் முன் தன்னை அலங்கரித்துக் கொண்டிருக்கும் வனிதை தான் குணவதி போல் இருக்கிறது. அவள் என்னை இன்னும் கவனிக்கவில்லை. மெள்ளமாக அவள் பக்கம் திரும்பி, ஒரு தடவை அவளுடைய ரூப ஸௌந்தர்யத்தை நான் என் கண்களால் பருகலாமா?...கூடாது, கூடாது! அப்புறம் நான் அவளழகில் ஈடுபட்டு மதி மயங்கி, ஸ்மரணையை இழந்தால் அப்புறம் காரியம் கெட்டு விடும்........ சற்றுக் காத்திருந்து பார்க்கிறேன். அவளாக என்னுடன் பேசுகின்றாளா என்று.

ஜயா : ஐயா! தங்கள் அடிமை! காத்துக் கொண்டிருக்கிறேன்.

கார்மேகம் : அன்பே! நானும் காத்துக் கொண்டிருக்கிறேன்! நான் உன் அடிமை.

ஜயா : அன்பரே! ஏன் என் பக்கம் திரும்பாமலே பதில் அளிக்கிறீர்கள்?

கார்மேகம் : அன்பே! நான் உன் அறையில் பிரவேசித்ததும், நீ நிலைக் கண்ணாடியின் முன் நின்று கொண்டு அலங்காரம் செய்து கொண்டிருப்பதை ஒரு கண நேரம் தான் கவனித்தேன். நீ அணிந்து கொண்

டிருக்கும் நீல வர்ணச் சேலையையும், உன் வெண்மையான கரங்கள் மலர்ந்த பூச் செண்டைக் கேசத்தில் அலங்கரிப்பதையும் கண்டேன். கரு மேகத்திடையே, ஒரு மின்னல் தோன்றி மறையாது அங்கேயே நின்று விட்டதோ என்று அதிசயித்தே விட்டேன். உன்னுடைய பின் அழகே என் கண்களைக் கூசச் செய்து விட்டது. நான் உன் முகத்தின் அழகை எவ்வாறு தைரியத்துடன் துணிந்து பருக முடியும்!

ஜயா : ஐயா! தாங்களோ இப்பேர்ப்பட்ட மின்னல் தாக்கியும் விழாத பசுமரம் மாதிரி நிற்கிறீர்களே! விருட்சத்தைக் கண்டு இந்த மின்னல் நாணம் கொள்கிறது! அன்பரே, இந்த அடிமையிடம் ஏதாவது பகர வேண்டுமா ?

கார்மேகம் : (தனக்குள்) அடே! நான் நினைத்ததற்கு மாறாகவே காரியமெல்லாம் வெகு சுலபமாக முடியும் போலிருக்கிறதே! அவளே என்னை அன்புடன் அழைத்துவிட்டு, சல்லாபம் செய்யவும் தூண்டுகிறாளே! எல்லாம் இந்தக் கார்மேகத்தின் வசீகரத் தோற்றம் தான் இவ்வளவு வேலையையும் செய்கின்றது !

ஜயா : ஐயா, கார்மேகமே! என்ன, யோசனையில் ஆழ்ந்து விட்டீரா ? தயவு செய்து இந்த ஆசனத்தில் அமருங்கள்.

கார்மேகம் : (தனக்குள்) ஆஹா! என்ன கனிவு! ஆம்! நான் இடுப்பில் கைகளை வைத்துக் கொண்டு அலட்சியமாக நின்றதும், நான் நினைத்தபடி பலனும் கிடைத்து விட்டது. குணவதி இவ்வளவு எளிதில் என்மேல் காதல் கொண்டு விடுவாள்

என்று நான் நினைக்கவே இல்லை. ஆம். எல்லாம் ஆளைப் பொறுத்து இருக்கிறது.

ஜயா : ஐயா! நின்று கொண்டிருக்கிறீர்களே! ஆசனத்தில் அமருங்கள்.

கார்மேகம் : அன்பே! என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அஞ்சுகமே! உன்னுடைய உதார குணமானது, ஒரே கணத்தில், என்னைப் பரவசமாக்கி விட்டது. நான் உனதடிமை. கருணையே என்ன என்று தெரியாத இக் கரங்களால் உன் மிருதுவான கரங்களைப் பற்ற அனுமதி தருவாயா?......கருணை கூர்ந்து, என் பக்கம் திரும்பி உன் கடைக் கண் பார்வையினால் அனுக்கிரகித்து என்னைப் புது மனிதனுக்க மாட்டாயா?

(கார்மேகம் அவள் முகவாய்க் கட்டையில் கையைக் கொடுத்து அவள் முகத்தை நிமிர்த்துகிறான். முகத்தைக் கண்டு பயப்படுகிறான். பற்றியிருந்த கரங்களை விட்டு விடுகிறான்.)

ஜயா : அன்பரே! அதி சீக்கிரத்தில் உங்களுடைய பௌருஷத்தில் மயங்கி விட்டேன் என்று ஆச்சர்யப் பட்டு விட்டீர்களா! ஆமாம். மற்றப் பெண்களைப் போல், ஹிருதயத்தில் அன்பு இருந்தும் இல்லாதது போல் காட்டிக் கொள்வேன் என்று நினைத்தீர்களா?

கார்மேகம் : ஆம்! கொஞ்சம் ஆச்சர்யம்தான் அடைந்தேன். (தனக்குள்) என்ன விபரீதம்! இந்தப் பெண் குணவதியாக இருக்க முடியாது. இது என் பாட்டியைப் போல் அவ்வளவு கிழமாக அல்லவோ தோற்றம் அளிக்கிறது. கண்ணைப் பார்.

மீன் போல் இருக்கும் என்று அவர் சொன்னரே! கோட்டான் கண் மாதிரி அல்லவோ இருக்கின்றது!

ஜயா: ஆம். நீங்கள் ஆச்சர்யம் அடைந்ததில் அதிசயமும் தான் என்ன இருக்கிறது? என் தகப்பனர் என் அழகைப் பற்றி உங்களிடம் வர்ணிக்கும் போது, நீங்கள் நம்பி யிருக்க மாட்டீர்கள். நீலமேகம் பிள்ளையின் மகள் "ரொம்ப அழகு, ரொம்ப அழகு" என்று சொல்லுகிருர்களே, தெரியாமலா சொல்லுகிருர்கள்?

கார்மேகம்: (தனக்குள்) நீலமேகம் பிள்ளையினுடைய பெண்ணு! அப்போது இவள் குணவதியாகத் தான் இருக்கவேண்டும். அட கஷ்டமே! பெற்ருேர்கள் தான் தங்கள் பெண்களின் அழகைப் பற்றிய வரையில் குருடர்களாக இருப்பார்கள் என்று தெரியும். ஆனல், இந்த ஊரில் இருப்பவர்கள் எல்லோருமே குருடர்களாக இருக்கிருர்களே! இது என்ன விந்தை?

ஜயா: அன்பர் கார்மேகமே! ஆசனத்தில் அமருங்கள்.

(ஆசனத்தில் அமர்ந்து எழுந்து விடுகிருன்.)

கார்மேகம்: (தனக்குள்) ஆம்; ஆம்! அந்த சுந்தரி அப்பொழுதே சொன்னளே, "குணவதி வயது வந்த மாதிரி தோற்ற மளிப்பாள்" என்று. அது முற்றிலும் உண்மையாகவே இருக்கிறதே! போகட்டும்; இதனல் என் காரியம் ஒன்றும் பாதிக்கப் படப் போவதில்லை. ஏனென்ருல், இந்தக் குணவதியின் அழகைக் கண்டு மயங்கி அவளைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் நான் வர வில்லையே! அவளுடைய பணத்திற்கு ஆசைப் பட்டுத்தான்...............

ஜயா : அன்பரே! ஆசனத்தில் அமராமல் தீர்க்காலோசனை யில் ஆழ்ந்து விட்டீரே!

கார்மேகம் : குணவதி! உன்னுடைய உதார குணமானது என்னைப் பரவசமாக்கிச் சிறிதுநேரம் என்னுடைய சுய நிலையை இழக்கச் செய்து விட்டது. (தனக்குள்) ஐயோ! அவளுடைய கன்னம், கிழவிகளுக்கு ஒட்டின கன்னம் இருக்குமே, அது மாதிரி யல்லவோ இருக்கிறது!

ஜயா : அன்பரே! நான் இவ்வளவு எளிதில் தங்களிடம் என்னைப் பறிகொடுத்து விட்டேனே! அதைக் காரணமாகக் கொண்டு என்னை இழிவாக நினைத்து விடாதீர்கள். என் தகப்பனார் என்னிடம் கூறிய பொழுது உங்களைப் பற்றிய உண்மையையே கூற வில்லை. என்னை அவர் கேலி செய்கிறார் என்றே எண்ணி யிருந்தேன். அதனால்தான், நான் சுகுணனிடம் காதல் கொண்டிருப்பது போல் நடித்தேன். உண்மையில் நான் அவனிடம் காதல் கொள்ளவே யில்லை. இப்போது, நான் உங்களைக் கண்டதும் மெய்ம்மறந்து புளகாங்கித மானேன். உங்களைப் பற்றி 'அப்படி, இப்படி' என்றெல்லாம் சொல்லி விட்டார்கள்.

கார்மேகம் : ஆம் உன் திவ்ய அழகைப் பற்றி என்னிடமும் 'அப்படி, இப்படி' என்றெல்லாம் சொல்லி விட்டார்கள்!

ஜயா : உங்களைக் கண்டதும், உண்மையில் என் கண்களையே நம்ப முடியவில்லை. அப்படியே சமைந்து விட்டேன்.

கார்மேகம் : இங்கேயும் அப்படித்தான். உன்னைக் கண்டதும் உண்மையில் என் கண்களை நம்பவே முடிய

வில்லை. இடி விழுந்ததுபோல், அப்படியே சமைந்து விட்டேன்.

ஐயா : அன்பரே! நீர் நினைத்திருப்பீர்! நான் முற்போக்குள்ளவளாகவும், அதிகப் 'பிரசங்கித்தனமுள்ளவளாகவும், அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஒன்றும் இல்லாதவளாகவும் இருப்பேன் என்று. அதே போல் தான், உங்களைப்பற்றி நீங்கள் தடிமனுகவும், தாடியுடன் பூதாகாரமாகவும், கறுப்பாகவும், அவலட்சணயாகவும், மட்டு மரியாதையே தெரியாத காட்டுமிராண்டி போலவும் இருப்பீர், என்று என்ன வெல்லாமோ பொருமையினல் சொன்னுர்கள். ஆனல் நீங்கள் ஓர் உயர் குலத்திலுதித்தவர் என்று உங்களுடைய நடை, உடை, பாவனைகளிலேயே தெரிந்து விட்டது போதாக்குறைக்கு உங்களுடைய ஊடுருவிச் செல்லும் பார்வையும், முகத்தில் தவழும் புன்னகையும் அதை நன்ருக ஊர்ஜிதப் படுத்துகின்றன. அன்பரே! என் தகப்பனுர் நான் எவ்வளவு நன்ருகப் பாடுவேன் என்பதைப் பற்றி உங்களிடம் சொல்ல வில்லையா?

கார்மேகம் : ஆம், சொன்னுர். (தனக்குள்) பாட்டு வேறு? என்னைச் சும்மா விட்டால் போதாதா? ஆனல் என் காரியம் ஆக வேண்டுமே. (வெளிப்படையாக) சரி! ஒரு சிறு பாட்டின் முதலடியை மட்டும் ஒரு தடவை பாடு போதும்.

ஐயா : 'பாயுமொளி நீயெனக்கு......'

கார்மேகம் : (தனக்குள்) குயிலினுமினிய குரல் என்ருரே நீலமேகம்; ஒரு வேளை, மயில் என்று சொல்வதற்குப் பதிலாகக் குயில் என்று தவறிச் சொல்லிவிட்டாரோ, என்னமோ!

(வெளிப்படையாக) அம்மா! குணவதி! உனக்குத் தொண்டை கட்டியிருக்கிறது போலிருக்கிறது. போதும் பாடினது.

(கஷ்டப்பட்டு அவளைப் பாடாதபடி செய்கிருன்.)

ஜயா: அன்பரே, அப்படியொன்றுமில்லை! என் தொண்டை வாகே அப்படித்தான். இன்னும் கொஞ்சம் சுருதியை ஜாஸ்தியாக வைத்துக் கொண்டு பாடுகிறேன், கேளுங்கள்.

(ஜயா மேலும் பாடுகிருள்.)

கார்மேகம்: குணவதி! உன் பாட்டைக் கேட்டதும் எனக்கு ஞாபகம் வருகிறது. என் வீட்டிற்குப் பின் பக்கத்தில்......

ஜயா: ஆ! என்ன! இன்னொருத்தி இருக்கிருளா?

கார்மேகம்: இல்லை. இல்லை! நான் பெண்ணைப் பற்றியே குறிப்பிடவில்லை. ஆனுல் எதைப்பற்றி என்று சொல்ல...

ஜயா: அன்பர் கார்மேகமே! எனக்குத் தெரியும். குயில்! ஆம். குயிலைப் பற்றித்தான்; உம்... கார்மேகம், நீங்கள் என் அழகில் ஈடுபட்டு வார்த்தைக்கே திண்டாடுகிறீர்களே! பாவம், நமக்குக் கல்யாணம் ஆனபிறகு நான் உங்களைக் குழந்தையைப் போல் பாதுகாக்கப் போகிறேன்.

கார்மேகம்: அப்படியானுல், என்னைக் கல்யாணம் செய்து கொள்ள உனக்குச் சம்மதமா!

ஜயா: பூர்ண சம்மதம்! பூர்ண சம்மதம்! என் வாழ் நாட்களைப் புனித மாக்கப் போகும் தயாசிலர் கார்மேகமே!

கார்மேகம் : அப்படியானால் இப்பொழுதே நீலமேகம் பிள்ளையிடம் இருவரும் சென்று நம் சம்மதத்தைத் தெரிவிப்போம்.

ஜயா : ஆனால்......

கார்மேகம் : ஆனால் என்ன ?

ஜயா : கார்மேகம்! என் தகப்பனார் என் கல்யாண சம்மதத்தைப் பெறாமல் என்னிடம் பேசமாட்டேன் என்று சபதம் செய்துவிட்டுச் சென்றாரே, அப்போது நானும் ஒரு சபதம் செய்து கொண்டேன். அதாவது, நான் எப்படியாவது என் காதலருடன் வீட்டை விட்டு வெளியே வேறு எங்கேயாவது சென்று, திருட்டுத்தனமாகத் தான் கல்யாணம் செய்து கொள்வேன் என்று. அதனால் நாம் இருவரும் கல்யாணம் செய்து கொள்ளுவதற்குத் தகப்பனார் சம்மதம் முற்றிலும் இருந்தாலும்,நீர் என்னைத் திருட்டுத்தனமாக இந்தவீட்டை வீட்டுக் கூட்டிக் கொண்டு மற்றொரு ஊருக்குச் சென்று கல்யாணத்தை முடித்துக் கொள்ள வேண்டும். பிறகு வேண்டுமானாலும் தகப்பனாருக்குத் தெரிய வைத்துக் கொள்ளலாம்.

கார்மேகம் : உம்.......

(யோசனையில் ஆழ்ந்து விடுகிறான்.)

ஜயா : அப்படி உங்களுக்குத் தைரியமில்லாவிட்டால்......

கார்மேகம் : அப்படி ஒன்றுமில்லை, குணவதி; (தனக்குள்) அடே! அவள் சொல்லுகிறபடி நான் செய்தால் எனக்கு நல்ல அதிர்ஷ்டம்தான். ஏனென்றால், அவளைக் கல்யாணம் செய்து கொண்டால் அவள் சொத்து அனைத்தும் என்னைச் சேரும். நீலமேகம்

பிள்ளைக்குத் தெரிவிக்காமல் இருந்தால் மாப்பிள்ளை செய்ய வேண்டிய சீர் வரிசைகளையும் செய்யாமல் இருந்து விடலாம். என்னவென்று சொல்வது! இந்தக் கார்மேகத்தின் சிறிய மூளை எவ்வளவு கூர்மையாக வேலை செய்கிறது. இது யாருக்குத் தெரியப் போகிறது? (வெளிப்படையாக) குணவதி!

ஜயா: என்ன முடிவு செய்தீர்?

கார்மேகம்: குணவதி! என் அன்பே! உன் அழகும் மனோதிடமும் என்னை உன் அடிமை யாக்கிவிட்டன. இனி நீ இட்டது தான் சட்டம்.

ஜயா: மிக்க சந்தோஷம், கார்மேகம்! உம்..கடைசியாக ஒரு விஷயம்.

கார்மேகம்: என்ன?

ஜயா: நீர் என் தகப்பனாரிடம் சென்று என்னுடன் தனியாகத் தோட்டத்தில் உலாவ உத்தரவு வாங்கிக் கொண்டு வர வேண்டும்.

(கார்மேகம் தலையை ஆட்டுகிறான், ஆமோதித்தவன்போல்.)

ஆனால் ஒன்றுமட்டும் மறக்காதீர்கள். நான் உங்களிடம் காதல் கொண்டு கல்யாணத்திற்குச் சம்மதித்து விட்டேனென்று சொல்லி விடாதீர்கள்.

கார்மேகம்: அப்படியே ஆகட்டும், குணவதி.

ஜயா: நான் சொன்னது ஞாபகமிருக்கட்டும். ஜாக்கிரதை.

கார்மேகம்: குணவதி! எதற்கும் பயப்படாதே! நீ சொன்னபடியே ஜாக்கிரதையாக நடந்து கொள்கிறேன். (தனக்குள்) இனிமேல் தான் குணவதிக்கு இந்தக்

கார்மேகத்தின் சிறிய மூளை எவ்வளவு கூர்மையாக வேலை செய்யும் என்று தெரியப் போகிறது! ஒரு பெண்ணை ஏமாற்றிப் பணம் பறிக்க மனது இணங்க மாட்டேன் என்கிறது. ஆனால் அவளையே தான் நான் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறேனே!

(சோமு 'கார்மேகம் கார்மேகம்' என்று கூப்பிட்டுக் கொண்டு வருகிறான்.)

சோமசுந்தரம்: கார்மேகம், கார்மேகம்!

கார்மேகம்: ஆ! என் தோழன் வந்து விட்டான்......என்ன சோமசுந்தரம்! விசேஷம் ஏதாவது உண்டா?

சோமசுந்தரம்: சுந்தரி உன் வீட்டில் தங்கி இருக்கிறாள். அந்தச் சுகுணனை எங்கெல்லாம் போய்த் தேடியும் அகப்பட வில்லை.

கார்மேகம்: சரி! நானே சென்று தான் அவனை அழைத்துக் கொண்டு வரவேண்டும் போலிருக்கிறது. போகட்டும்; நண்பா சோமு! இந்தப் போக்கிரி கார்மேகம் எடுத்த வேலை எல்லாம் ஜயம் தான்.

சோமசுந்தரம்: சரி; எங்கே உன் காதலி குணவதி?

கார்மேகம்: ஏன், கண் தெரியவில்லையா? அதோ நிற்கிறாளே, அவள் தான்!

சோமசுந்தரம்: யாரு?.........அந்தக் கிழமா? அந்தக் கிழவியை.........!

(சோமுவின் வாயைப் பொத்துகிறான் கார்மேகம்.)

கார்மேகம்: ச்சு! ச்சு!

ஜயா: உங்கள் நண்பர் என்ன சொல்லுகிறார்?

கார்மேகம்: உன் அழகைத் தான் வர்ணிக்கத் தொடங்கி விட்டார்.

சோமசுந்தரம் : ஆம்! உங்களைப் போல ஸௌந்தர்யவதியை நான் இதுவரை பூலோகத்தில் கண்டதே இல்லை. இனியும் காண்பேனோ என்னவோ, தெரியாது.

ஜயா : கார்மேகம்! உங்களுடைய தோழர் கூட சிறந்த ரஸிகர் போலிருக்கிறதே! இனம் இனத்தோடு தானே சேரும்!

கார்மேகம் : குணவதி! நான் சென்று வரட்டுமா?

ஜயா : சென்று வாருங்கள்.

கார்மேகம் : சோமு, வா, போகலாம்.

(சோமுவும்; கார்மேகமும் போகிறார்கள் திரை விழுகிறது)

★

காட்சி—6

இடம்: நீலமேகம் பிள்ளை வீடு. கூடம்.

காலம்: காலை.

நீலமேகம்: *எவ்வளவு நேரம் நான் உன்னோடு வாதாடுவது? சொன்னது சொல்லியாகி விட்டது. சுகுணனுக்குச் சொத்தா, சுதந்திரமா, வீடா, காடா ஒன்றும் கிடையாது.*

சுந்தரம்: *ஆம்! நீர் சொல்லுவது உண்மைதான். ஆனால் அவன் நல்ல கண்ணியமான குடும்பத்தைச் சேர்ந்தவன். மேலும், சுகுணனிடம் நல்ல படிப்பு, உயர்ந்த அந்தஸ்து, தக்க மரியாதை எல்லாம் இருக்கின்றன.*

நீலமேகம்: *ஆனால் அவன் ஏழை. பணமில்லாதவன். சொத்து இல்லாதவனைப் பற்றி என்னிடம் பேசாதே. அவனுக்குப் பரிந்து பேச வந்து விட்டான், வேலிக்கு ஓணான் சாட்சிபோல! ஏண்டா தம்பி சுந்தரம், அந்தச் சுகுணன், அவன் அப்பன் ரொக்கமாய்ப் பத்து லக்ஷம் சேர்த்து வைத்திருந்ததை ஜலமாய்க் கரைத்து விட்டானே! தெரியுமா இல்லையா? பின்னே ஏன் திரும்பத் திரும்ப என்னுடன் வாதாடுகிறாய்?*

சுந்தரம்: *சுகுணன் அந்தப் பத்து லக்ஷத்திலிருந்து ஒரு ரூபாயைக் கூட எடுத்துச் செலவழிக்க வில்லை. அவனுடைய உறவினர்களும் பங்காளிகளும் பறித்துக் கொண்டு போய் விட்டனர். அவன் வியாஜ்யம் போட்டு வேண்டுமானால் பணத்தை மீட்கலாம். ஆனால் அவன் அப்படிச் செய்ய இஷ்டப்படவில்லை.*

நீலமேகம்: *சுந்தரம்! உன்னைப் போல ஒரு அசட்டுப் பிள்ளையை நான் கண்டதே இல்லை. நியாயமாம்,*

வியாஜ்யமாம்! எல்லாம் வயதானால் தன்னால் தெரியும். உலகத்தில் அடிபட்டால் அல்லவா நல்லது கெட்டது தெரியப்போகிறது.

சுந்தரம்: (தனக்குள்) செவிடன் காதில் சங்கு ஊதுவது போல் இருக்கிறது, நான் சொல்வதெல்லாம். அதோ அந்தக் காண்டாமிருகம்....ம்...ம்...கார்மேகம் வருகிறான். நான் போய் மறைவாக நின்று, நடப்பதைக் கவனிக்க வேண்டும்.

(கார்மேகம் வருகிறான்.)

நீலமேகம்: என்ன கார்மேகம், உன் அதிர்ஷ்டம் எப்படி இருக்கிறது?

கார்மேகம்: அதிர்ஷ்டத்திற்குக் குறைவில்லை... உம்...

நீலமேகம்: அவள் சம்மதத்தைப் பெற்று விட்டாயா?

கார்மேகம்: குணவதி என்னிடம் பிரியத்துடன் நடந்து கொள்ள மாட்டாள் என்று முதலில் நினைத்தேன். ஆனால் அவள் நான் நினைத்ததற்கு மாறாகவே பிரியத்துடன் நடந்து கொண்டாள்.

நீலமேகம்: ஓஹோ! அப்படியா! அவள் கொஞ்சம் முடுக்காக இருந்திருப்பாளே!

கார்மேகம்: இல்லை! அப்படி ஒன்றும் முடுக்காக இல்லை.

நீலமேகம்: இதைக் கேட்க எனக்கு மிக்க சந்தோஷம் உண்டாகிறது! சரி; அவளுடைய அழகைக் கண்டு ஆச்சர்யமடைந்திருப்பாயே.

கார்மேகம்: ஆமாம்; உண்மையில் ஆச்சர்யமே அடைந்து விட்டேன். இடியே விழுந்து தாக்கியது போல்

ஒரு கண நேரம் ஸ்தம்பித்து விட்டேன்...ஆமாம், குணவதியின் வயதென்ன?

நீலமேகம்: வயதா?......அவள் வயதென்ன, பதினெட்டு ஆகிறது.

கார்மேகம்: பதினெட்டு தானு! (தனக்குள்) ஐம்பது வயதாகியிருக்கும் போலவன்றோ எனக்குத் தோற்ற மளித்தாள்.

நீலமேகம்: ஆம், பதினெட்டே-தான். இந்த மாதம் தான் பதினெட்டு முடியப் போகிறது.

கார்மேகம்: (தனக்குள்) அப்படியானுல் இந்த உலகத்தி லேயே இந்தப் பதினெட்டு வயதில் இவ்வளவு கிழம் தட்டிப் போன முகத்தை இது வரை நான் கண்டதே யில்லை.

நீலமேகம்: கார்மேகம், குணவதியின் கண்களைக் கவனித் திருப்பாயே! நான் சொன்ன மாதிரி, என் கண் களைப் போலவே அகன்றதாகவும் கறுப்பாகவும் இல்லையா?

கார்மேகம்: ஆம். (தனக்குள்) அந்தக் கண்களுக்கு ஓர் ஒடிந்த மூக்குக் கண்ணுடிதான் தேவை!

நீலமேகம்: அவள் கன்னங்களின் குழிகளைக் கவனித்தாயா?

கார்மேகம்: ஆஹா! கவனித்தேன். (தனக்குள்) ஹுக்கா பிடிக்கும் கிழவனின் கன்னங்கள் மாதிரி இருக் கின்றன!

நீலமேகம்: ஆம்; அவள் பாட்டைக் கேட்டிருப்பாயே! எப்படிப் பாடினுள்?

கார்மேகம் : ஆஹா ! மயிலினு மினிமையாக...

நீலமேகம் : என்ன ?

கார்மேகம் : குயிலினு மினிமையாகப் பாடினுள். (தனக்குள்) வாய் குழறி நிஜம் வந்து விட்டது.

நீலமேகம் : சரி, கார்மேகம்...என் மகள் குணவதியைப் பற்றி என்ன நினைக்கிறுய்?

கார்மேகம் : அதென்ன அப்படிக் கேட்டு விட்டீர்கள்? ரவி வர்மா படமெழுதினுனே, அவன் மட்டும் உயி ருடன் இருந்தால், குணவதியின் அழகைக் கண் டதும், தான் இதுவரை எழுதிய படங்களைக் கிழித்து விடுவான். (தனக்குள்) தொழிலையும் விட்டுவிடுவான்.

நீலமேகம் : என்ன கார்மேகம், அப்படியானுல் குணவதி யின் சம்மதத்தைப் பெற்று விட்டாய் என்று சொல்லு.

கார்மேகம் : ஆம்! அப்படித்தான் வைத்துக்கொள்ள வேண் டும். ஆனுல்......

நீலமேகம் : என்ன 'ஆனுல்'? அவள் சம்மதத்தைப் பெற வில்லையா ?

கார்மேகம் : அப்படிச் சொல்லவில்லை. அதாவது சம் மதத்தை முக்கால் வாசி பெற்று விட்டேன். நீங் கள் மட்டும் நான் அவளைக் கூட்டிக் கொண்டு தோட்டத்தில் உலாவ அனுமதி கொடுத்தால், அவள் முழு சம்மதத்தையும் பெற்று விடுவேன்.

நீலமேகம் : சபாஷ், கார்மேகம்! குணவதிக்குத் தகுந்த கண வன் நீதான். தாராளமாய்க் குணவதியுடன் தோட்

டத்தில் உலாவ அனுமதி தருகிறேன். (இருவரும் போகிறார்கள்)

சுந்தரம்: இதென்ன இது; விந்தையாக இருக்கின்றதே! குணவதி இந்தக் கார்மேகத்தைக் கனவிலும் நினைக்க மாட்டாளே! இவன் அவள் சம்மதத்தைப் பெற்று விட்டானாமே! இதில் ஏதோ மர்மம் இருக்கின்றது. அதை நான் அறிய வேண்டும்.

(சுந்தரம் போகிறான்; திரை விழுகிறது.)

★

காட்சி—7

இடம் : கார்மேகத்தின் வீடு; கூடம்.

காலம்: மாலை.

குணவதி : என்னைப் போல் எந்தப் பெண்ணாவது இப்போர்ப் பட்ட தர்ம சங்கடத்தில் மாட்டிக் கொண்டு முழிப் பாளா? விந்தை! எனக்காக என் தகப்பனார் தேர்ந்தெடுத்த மாப்பிள்ளை கார்மேகத்தைக் கொண்டே என் காதலர் சுகுணரை அழைத்து வரச் சொன்னேன். எவ்வளவு நாழிகையாகக் காத்துக் கொண்டிருக்கிறேன். ஒரு தகவலும் தெரியவில்லையே! ஒவ்வொரு நிமிஷமும் ஒவ் வொரு யுகமாகக் கழிகின்றதே!.........ஐயோ! நான் என் காதலரைக் காண்பேனா!........... ஒரு வேளை, இந்தக் கார்மேகம் என்னைக் காட்டிக் கொடுத்து விடுவானோ!.........ஆ! என்ன மடத் தனம் செய்தேன்! பெண் புத்தி பின் புத்தி என் பார்களே, அது சரியாகப் போய் விட்டதே. ஆழம் தெரியாமல் சேற்றில் காலை வைத்து விட் டேனே! ஜயாவின் கதி என்ன வாயிற்றோ, தெரியவில்லையே! அவள் தன் காரியத்தைச் சாதித் துக் கொண்டாளோ என்னமோ? ஐயோ! ஒன் றுமே தெரியாமல் திண்டாடுகிறேனே! இருந் திடினும், நான் தைரியத்தைக் கை விடாமல்...... அதோ, கார்மேகம் என் அன்பர் சுகுணரை இங்கே அழைத்துக் கொண்டு வருகிறார் போல் இருக்கிறது. அடுத்த அறையில் மறைவாக நின்று கொள்ளுகிறேன்.

(சுகுணன், சோமசுந்தரம், கார்மேகம் மூவரும் வருகிறார்கள்.)

சுகுணன் : கார்மேகம்! என்னை ஏன் இவ்வளவு தூரம் வீணாக அழைத்துக் கொண்டு வந்தாய்? இப்

போதும் சொல்லுகிறேன் கேள்; சுந்தரிக்கும் எனக்கும் ஒருவித நேசமும் கிடையாது. அவளிடம் நான் காதல் கொள்ள வில்லை. அவளும் என் பேரில் காதல் கொண்டிருக்க முடியாது.

கார்மேகம் : அதைத் தான் நீயே பார்க்கப் போகிறாயே!...... சோமு, சுந்தரி எங்கே?

சோமசுந்தரம் : அதோ அடுத்த அறையில் இருக்கிறாள்.

கார்மேகம் : சுகுணா! இந்தக் கார்மேகத்தின் வார்த்தையை மதிக்க மாட்டேன் என்கிறாயே! பெண் உள்ளத்தை நன்கு அறிந்த என்னிடம் உனக்கு இவ்வளவு தானா மதிப்பு!...... சுகம் காலடியில் காத்துக் கொண்டிருக்கிறது. இப்பொழுதாவது தாமதிக்காமல் சீக்கிரம் போய்ச் சுந்தரியின் தாபத்தைத் தீர்த்து வை அப்பா! கரும்பு தின்னக் கூலி கேட்பதுண்டோ!

சுகுணன் : நீ சொல்வது உண்மைதான். ஆனால், நான் அவளைப் பார்க்க விரும்பவில்லை.

கார்மேகம் : ஓஹோ! உன் காதலி குணவதி அல்லவா? அதனால் தான் நீ சுந்தரியைக் காண விரும்பவில்லை. ஆனால் சுகுணா! என் வார்த்தையை அறவே மறந்து விடு என்று சொல்வேன். அதற்கு மேல் நான் ஒன்றும் சொல்லமாட்டேன். நீயே தெரிந்து கொள்ள வேண்டியது தான்.

சுகுணன் : சுந்தரி என் நண்பன் சுந்தரத்தின் அன்பைக் கொண்டவள். அவன் ஆருயிர்க் காதலி. அதனால் அவனது காதலின்பத்தில் துரோகமென்ற விஷத்தைக் கலக்க மாட்டேன்.

கார்மேகம் : ஹ் ஹா! ஹா! காதலாம், துரோகமாம்! பைத்தியக்காரன்! சண்டையிலும் காதலிலும் ஆயிரம்

பொய்கள் சொல்லியாவது காரியத்தை ஜயமடை-யச் செய்ய வேண்டும் என்று பெரியோர்கள் சொல்லுவார்களே, கேட்டதில்லையா. சுகுணா, நீ அவனிடம் காதல் புரிய வேண்டாம். அவனிடம் சென்று பேசி விட்டு வா; அதுவே போதும்!

சுகுணன் : (தனக்குள்) சுந்தரியாக இருக்கும் பட்சத்தில், அவள் என்னிடம் காதலைப்பற்றிக் கூறுவதாக இருக்காது. ஒருவேளை அவளுடைய காதலனை சுந்தரத்தை அடைய என் உதவியை நாடுகிறாள் போல் தோன்றுகிறது. (வெளிப்படையாக) நல்லது கார்மேகம்; நான் அவளை எங்கே காணுவது?

(கார்மேகம், சுகுணனைக் குணவதி இருக்கும் அறையில் தள்ளி விட்டுக் கதவைத் தாளிட்டுச் செல்கிறான்.)

கார்மேகம் : என்ன சோமு! இந்தக் கார்மேகத்தின் சிறு மூளை எவ்வளவு கூர்மையாக வேலை செய்கிறது! அந்தச் சுகுணனைப் பார்த்தாயா?.........அந்தச் சுந்தரியின் காதல் வலையில் சிக்க வைத்து விட்டால், பிறகு என் காரியம் எல்லாம் ஜயம்......சோமு.. ... நான் சென்று, கதவின் இடுக்கு வழியாகப் பார்க்கிறேன்-அங்கே என்ன நடக்கிறது என்று.

(கதவின் இடுக்கு வழியாகக் கார்மேகம் கவனிக்கிறான்.)

அடே! இந்தச் சுகுணன் வெகு உல்லாசமாக அவளுடன் பேசிக் கொண்டிருக்கிறானே. அவள் மையலில் நன்றாகச் சிக்கிவிட்டான்..... இப்போது அவள், அவன் தோளில் வலது கையை வைத்துக் கொண்டிருக்கிறாள். அவனும் அவளுடைய

*தோளின் மேல் கைகளைப் போட்டு விட்டான்......
பேஷ்! கார்மேகம் வேலையே வேலைதான்!*

சோமசுந்தரம்: *எங்கே நான் பார்க்கிறேன், கார்மேகம்! (பார்க்கிருன்) இருவரும் கைகளைக் கோர்த்துக் கொண்டும், சிரித்துக் கொண்டும் சல்லாபம் செய்து கொண்டிருக்கிருர்கள்.*

கார்மேகம்: *பார்த்தாயா சோமு! இந்தச் சுகுணன் ஒரு பெரிய மனிதன் போல நடித்தானே! வெளி வேஷம் எல்லாம்! அவன், தன் நண்பன் சுந்தரத்தின் காதலியைத் தட்டிக் கொண்டு போக சிறிதாவது தயங்கினுனு! இவனல்லவோ துரோகி.........*

(குணவதியும், சுந்தரமும் அறையை விட்டு வெளியே வருகிருர்கள்.)

சுகுணன்: *நண்பா கார்மேகம்! நான் சிறிது தயங்கினதற்காக என்னை மன்னிக்க வேண்டும். இந்த வனிதை என் உள்ளத்தை அப்படியே கௌவிக் கொண்டு விட்டாள். நான் இவளையே மணந்து, என் இல் வாழ்க்கையை நடத்தத் தீர்மானித்து விட்டேன். அதனுல் நீலமேகம் பிள்ளையின் வீட்டிற்கு இனி, நீ பயமின்றி, போட்டியின்றிச் செல்லலாம்.*

கார்மேகம்: *சுகுணு! நீ நல்ல காரியம் செய்தாய்! உன் நடத்தையை நான் மிகவும் மெச்சுகிறேன்! இந்தக் காதல் விஷயத்தில் மட்டும், உயிருக் குயிரான நண்பனையே வஞ்சிப்பதாக இருந்தாலும், அதில் தவறு இல்லை என்பதே என் அபிப்பிராயம். இது உலகத்தில் சகஜமாக நடப்பதே தான்!*

சுகுணன்: *நீ அவ்வாறு எண்ணம் கொண்டிருப்பது எனக்கு மிகவும் ஆறுதலை அளிக்கிறது.*

கார்மேகம்: சுகுணு! நாம் இனி ஒருவருக்கொருவர் குணவதியைப் பற்றிப் போட்டியிட வேண்டிய அவசியம் இல்லாததால், சினேகிதர்களாகி விடுவோம். நீங்கள் இருவரும் கல்யாணம் செய்து கொண்டு சுகமாக வாழுங்கள். உங்களுக்கு என் மனமார்ந்த ஆசிகள்.

குணவதி: நீங்கள் மனது வைத்தால் எங்கள் இருவர் சுகத்திற்குக் குறுக்கே ஒருவரும் நிற்க முடியாது.

சுகுணன்: கார்மேகம்! எங்கள் காதலுக்கு உயிர் தந்த நண்பா! நான் சென்று வருகிறேன்.

கார்மேகம்: போகு முன் ஒரு வார்த்தை ....

சுகுணன்: என்ன?

கார்மேகம்: இன்று சாயங்காலமே, நானும் குணவதியும், நீலமேகம் பிள்ளைக்குத் தெரியாமல் வீட்டை விட்டு ஓடி விடப் போகிறோம்! குணவதியுடன் நான் தோட்டத்தில் உலாவ அவரிடம் உத்தரவு வாங்கிக் கொண்டு விட்டேன். குணவதியின் யோசனைதான் இது! நல்ல சமயம் பார்த்து ஒருவரும் அருகே இல்லாத போது ஓடிவிடப் போகிறோம்!

சுகுணன்: அப்படியா? எனக்கு மிகவும் சந்தோஷம். ஆனால், இதைப் பற்றி நீலமேகத்திற்குத் தெரிவிக்கப் போவதில்லையா?

கார்மேகம்: தெரிவிக்கப் போவதில்லை. ஏனென்றால் திருட்டுத்தனமாக அவளைக் கூட்டிக் கொண்டு வந்து கல்யாணமும் செய்து கொண்டு விட்டால், அவள் சொத்து முழுவதும் என்னைச் சேர்ந்து விடும்.

மேலும், அவளுக்காக மாப்பிள்ளை சீர் வரிசைகள் ஒன்றும் நான் செய்ய வேண்டியதில்லை. எப்படி இந்தக் கார்மேகத்தின் சிறிய மூளை, எவ்வளவு கூர்மையாக வேலை செய்கிறது பார்த்தாயா? யாருக்குத் தெரியப் போகிறது? எல்லாம் கடைசியில் தெரியும்!

சுகுணன் : ஆமாம், அபார மூளைதான்! எல்லாம் கடைசியில் தான் தெரியும்.

கார்மேகம் : இந்த விஷயம் நீலமேகத்திற்குத் தெரிந்ததும், அவர் முகத்தைப் பார்க்க வேண்டுமே! என்றால் சிரிப்பையே அடக்க முடியாமல் போய்விடும்.

குணவதி : ஆமாம்! உண்மை வெளி வந்தவுடன் எனக்கும் சிரிப்பை அடக்க முடியாமல் போய்விடும்.

கார்மேகம் : சுகுணா! நான் உன்னைச் சந்திக்க வேண்டுமானால் எங்கே சந்திக்கலாம்?

சுகுணன் : நாங்கள் இருவரும் தோழி ஸரஸாவின் அத்தை வீட்டிற்குப் போகிறோம். இந்த விஷயத்தை யாரிடமும் சொல்ல வேண்டாம். என்னைக் காண வேண்டுமானால், அங்கேயே காணலாம்.

(எல்லோரும் போகின்றனர். திரை விழுகிறது.)

★

காட்சி—8

காலம் : காலை.

இடம் : நீலமேகம் பிள்ளையின் வீடு.

நீலமேகம் : *என்ன அதிசயம்! எல்லாம் ஒரே ஆச்சர்யமாக இருக்கிறதே! குணவதி கார்மேகத்தோடு ஓடி விட்டாள்! இது என்ன விந்தை! குணவதியைக் கூப்பிட்டுப் பயமுறுத்தி, கார்மேகத்தைத் தான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினேனே! கார்மேகத்துடனே குண வதி ஓடிவிட்டாளே! எங்கேயாவது கேட்ட துண்டா? கல்யாணப் பெண்ணே மாப்பிள்ளை யோடு ஓடி விட்டாளே! இது ஜால வித்தை மாதிரி யல்லவா இருக்கிறது!*

(வேலைக்காரன் சண்டமாருதம் ஒரு கடிதத்துடன் வருகிறான்.)

சண்டமாருதம் : *ஐயா! இதோ! கார்மேகம் தங்கள் சமூ கத்திற்கு அனுப்பி யிருக்கும் கடிதம்.*

(வேலைக்காரன் போய் விடுகிறான்.)

நீலமேகம் : *கடிதமா? கார்மேகத்தினிடமிருந்தா? இந்தக் கடிதத்தைப் படித்த பிறகு எல்லா மர்மமும் விளங்கி விடும் என நினைக்கிறேன்.*

"அன்பு மிக்க நீலமேகம் பிள்ளை அவர்களுக்கு வணக்கம். தங்களுடைய உயிருக்குயிரான மகளை அழைத்துக் கொண்டு ஒருவருக்கும் தெரியாமல் வீட்டை விட்டு ஓடினது தவறுதான்"

(தவறு என்று இவன் சொல்லித்தானதெரிய வேண்டும்!)

"நான் தங்கள் மகளைச் சந்தித்த முதல் நிமிஷமே அவளுடைய பூரண சம்மதத்தைப் பெற்று விட்டேன். ஆனால் தாங்கள், குணவதி வழிக்கு வரா விட்டால் அவளுடன் பேச மாட்டேன் என்று சபதம் செய்தது போல், அவளும் தன் காதலன் எவனாக இருந்தாலும், தகப்பனாருக்குத் தெரிந்திருந்தாலும் தெரிந்திரா விட்டாலும், வீட்டை விட்டுத் திருட்டுத்தனமாக வெளியே சென்று ஒருவருக்கும் தெரியாமல் கல்யாணம் செய்து கொள்வதாகச் சபதம் செய்து விட்டாள். அதனால் தான், நான், அவளுடைய வேண்டுகோளுக்கு இணங்கியாக வேண்டியிருந்தது. கூடிய சீக்கிரம் நாங்கள் இருவரும் தங்கள் காலில் விழுந்து மன்னிப்புக் கோர வருவோம். இப்படிக்கு உங்கள் அன்புமிக்க

மருமகன் கார்மேகம்."

இதென்ன, ஆச்சர்யத்திற்குமேல் ஆச்சர்யம் நடந்து கொண்டே இருக்கிறதே! இன்று காலையில் குணவதி, "என் பிரேதத்திற்குத்தான் கார்மேகம் மாலையிட வேண்டும். நான் அவனை என் மனத்தாலும் தீண்ட மாட்டேன்" என்றெல்லாம் ஆவேசத்துடன் சொன்னாளே! அப்படியிருக்க, சாயங்காலத்திற்குள் அதே கார்மேகத்தோடு திருட்டுத்தனமாக ஓடியே விட்டாளே! என்னவென்றாலும் இந்தக் கார்மேகம் ஒரு கெட்டிக்காரப் புலிதான். என் மருமகன் திரும்பி வந்ததும், மருமகப்பிள்ளை சீர் வகைகள் எல்லாவற்றையும், வார்த்தை தவறாமல் செய்வான் என நம்புகிறேன்.

(சண்டமாருதம் இன்னுமொரு கடிதத்துடன் வருகிறான்.)

சண்டமாருதம் : ஐயா ! யாரோ ஒருவர், இந்தக் கடிதத்தை உங்களிடம் கொடுத்து விட்டு வரச் சொன்னார். பதிலுக்குக் காத்துக் கொண்டிருக்கிறார்.

நீலமேகம் : கையெழுத்தைப் பார்த்தால் என் மகள் குணவதியினுடையது எனத் தோன்றுகிறது.

"அன்புள்ள அப்பாவுக்கு அநேக கோடி நமஸ்காரம். நான் திடீரென்று வீட்டிலிருந்து ஓடி விட்டதற்காக என்னை மன்னிக்கும்படி கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். நான் ஓடி விட்டதற்குக் காரணத்தை நேரில் வந்து சொல்லுகிறேன்."

(அடே! இவள் சொல்லித்தான் தெரிய வேண்டுமா ! யாராவது குணவதியின் கடிதத்தையும், கார்மேகத்தின் கடிதத்தையும் படித்தால், இருவரும் வெவ்வேறு இடங்களில் இருந்து எழுதியிருக்கிறார்கள் என்று தோன்றும்.)

"நான் இன்னும் கல்யாணம் செய்து கொள்ளவில்லை, என் காதலன் என் பக்கத்திலேயே இருந்தும் கூட !"

(அடே ! கார்மேகம், அவளை ஓரே அடியாக மயக்கி விட்டானே !)

"நான் தங்களுடைய பதிலை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அதில் தங்களுடைய சம்மதத்தைத் தெரிவித்தால் உங்களுடைய மகளின் சந்தோஷத்திற்கு எல்லையே இல்லாமல் செய்து விடுவீர்கள்.

இப்படிக்கு
தங்கள் அருமைப் புதல்வி
குணவதி"

சண்டமாருதம் : பதில் கொடுக்கிறீர்களா ?

நீலமேகம் : என்னுடைய பதில் தானே ! பாவம்! என் செல்வப் புதல்வி என் சம்மதத்தைப் பெருமல் கல் யாணத்தை நிறுத்தி வைத்திருக்கிருள். ஆஹா ! தகப்பனுருக்கு என்ன மரியாதை !..............சரி, தாமதிக்காமல் உடனேயே என் சம்மதத்தைத் தெரிவிக்க வேண்டும்.

(பதில் எழுதுகிருர்.)

டேய் ! சண்டமாருதம்......டேய் ! பதிலுக் காகக் காத்துக் கொண்டிருக்கிருரே, அவரிடம் இந்தப் பதிலைக் கொண்டு போய்க் கொடு.

(வேலைக்காரன் கடிதத்தை எடுத்துக் கொண்டு போகிருன்.)

இந்தப் பிடிவாதம் எல்லாம் முன்னமேயே இல்லாமலிருந்தால் இவ்வளவு கஷ்டங்களுக்கு உள் ளாக வேண்டாமே..............டேய் ! சண்ட மாருதம்....

(வேலைக்காரன் வருகிருன்.)

சரி ; உடனேயே என் அருமை மகளை நான் மகிழ்விக்க வேண்டும். டேய் ! நாளைக்கே கல் யாணத்திற்கு வேண்டிய ஏற்பாட்டை எல்லாம் செய்யச் சொன்னேன் என்று புரோகிதர் ஐயா விடம் போய்ச் சொல்லு. மேளக்காரனுக்கும், பாண்டுக்காரனுக்கும் உடனே ஆளை அனுப்பி வை.

சண்டமாருதம் : அப்படியே எஜமான்.

(வேலைக்காரன் போகிருன்.)

நீலமேகம் : இந்த நீலமேகம் அதிர்ஷ்டசாலி என்றால் ரொம்ப அதிர்ஷ்டசாலிதான். எல்லாம் நினைத்தது போல் நடக்கிறது. இன்று தான் எனக்கு நன்னாள் குணவதிக்குக் கல்யாணம் செய்து வைத்து விட்டு, அவள் நன்றாகக் குடித்தனம் செய்வதைப் பார்த்து விட்டு, நான் உயிரை விட வேண்டும்.

(திரை விழுகிறது)

★

காட்சி 9.

இடம் : வீதியில் ஒரு புறம்.

காலம் : மாலை.

(மாணிக்கமும் சுந்தரமும் வருகிறார்கள்)

சுந்தரம் : என்ன மாணிக்கம், என் சுந்தரி எங்கிருக்கிறாள் என்பதைப் பற்றி ஒரு தகவலும் கிடைக்கவில்லையா ? ஆஹா ! என் சுந்தரீ, உன்னைவிட்டுப் பிரிந்திருப்பது மரணத் தருவாயில் ஒருவன் தத்தளிப்பது போலிருக்கிறதே.

மாணிக்கம் ; எஜமான் ! என்னால் முடிந்த வரையில், அங்கும் இங்கும், எல்லா விடங்களிலும் தேடிவிட்டேன். காணவில்லை. ஆனால் நான் கேள்விப்பட்டேன்... உங்கள் காதலி வீட்டை விட்டு ஓடிவிட்டார்களாம்...

சுந்தரம் ; அதுதான் தெரிந்த விஷயமாயிற்றே.

மாணிக்கம் : உங்களிடம் சொல்லப் பயமா யிருக்கிறது. சுகுணரே சுந்தரியைக் காதலிக்கிறாராம்.. அவர்கள் இருவரும்..... கூடிய சீக்கிரம்...

சுந்தரம் : அப்படி யொன்றும் இருக்காது, மடையா!

மாணிக்கம் : இன்னும் யாரோ சொன்னார்கள் ; சுந்தரி உங்களைக் காணாததால் தற்கொலை செய்துகொண்டு விட்டார்களாம். இன்னும் சிலர்...

சுந்தரம் : போதும் ; நிறுத்து. இந்த க்ஷணமே எங்கேயாவது எப்படியாவது சுந்தரியைப் பற்றிய தகவலைக் கொண்டு வா.

(மாணிக்கம் போகிறான்.)

ஒரு வேளை சுந்தரி என்னை மோசம் செய்யவும் துணிந்து விட்டாளோ?

(கார்மேகம் வருகிறான்.)

கார்மேகம்: அப்பாடா! நான் அவளை ஜாக்கிரதையாக நீல மேகம் பிள்ளை வீட்டிலிருந்து கிளப்பி வந்து விட்டேன். இனி எனக்கு என்ன கவலை? இஷ்ட மிருந்தால், சுகுணன் சுந்தரியைத் தாராளமாகக் கல்யாணம் செய்து கொள்ளட்டும்.

சுந்தரம்: என்ன கார்மேகம்? சுந்தரியைப் பற்றி என்னமோ சொன்னாயே, என்ன?

கார்மேகம்: நீ எப்படி இங்கு வந்தாய்? என் மைத்துன னாகப் போகும் சுந்தரமே!

சுந்தரம்: சீக்கிரம் சொல். சுந்தரியைப் பற்றிய விஷயம் என்ன?

கார்மேகம்: சொல்கிறேன்! கேள் மைத்துனா, அந்த வேடிக் கையை! இன்று காலையில், வழியில் அழகிய பெண் ஒருத்தி எதிர் நோக்கி வருவதைக் கண் டேன். அவளாகவே என்னிடம் வந்து தன் பெயர் சுந்தரி என்றும், ராஜரத்தினம் பிள்ளையின் மகள் என்றும் சொன்னாள். பிறகு சுகுணனை எப்படியாவது கண்டு அவளிடம் அனுப்பி வைக் கும்படி கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

சுந்தரம்: (தனக்குள்) அப்படியா! இருக்கவே இருக்காது.

கார்மேகம்: இந்தச் சுகுணன் தானே எனக்குப் போட்டி யாக இருக்கிறான். இவனுக்கும் சுந்தரிக்கும் முடி போட்டு விட்டால் என் காரியம் சுலபமாகி விடும் என்று தீர்மானித்து, நானே சென்று சுகுணனைக்

கண்டு பிடித்து அழைத்து வந்து அவளிடம் அனுப்பி விட்டேன்.

சுந்தரம் : அடே! கார்மேகம்! அவள் எங்கே இப்போது?

கார்மேகம் : அவள் எங்கேயா? அதுதான் சொல்லிக் கொண்டேயிருக்கிறேனே! சுந்தரி தன் காதலன் சுகுணனுடன் சுகமாக இருக்கிறாள்.

சுந்தரம் : கார்மேகம்! நீ என்னோடு அனுவசியமாக விளையாடுகிறாய். சுந்தரி என்னுடைய காதலி என்பது உனக்குத் தெரியாதா?

கார்மேகம் : சுந்தரம், என்னை அனுவசியமாகப் பயமுறுத்தாதே! ஆமாம். சுந்தரி உன்னுடைய காதலி என்பதைப் பற்றி எனக் கென்ன தெரியும்? சுந்தரி சுகுணனை அடைய வேண்டும் என்று சொல்லி என்னிடம் அடைக்கலம் புகுந்தாள். நான் அபயம் அளித்தேன். நான் அவள் விருப்பத்தின்படி, சுகுணனுடைய கரங்களிலேயே அவளை ஒப்படைத்து விட்டேன்!

சுந்தரம் : ஆ! என்ன விபரீதம் நடந்து விட்டது. கார்மேகம்! சுகுணன் கரங்களிலா என் சுந்தரியை விட்டு விட்டு வந்தாய்? இது நிஜமா?

கார்மேகம் : ஆமாம், ஆமாம், ஆமாம்......சுந்தரம். இன்னொரு வேடிக்கை தெரியுமா? இந்தச் சுகுணன் இருக்கிறானே! முதலில் என்னவோ நல்லவன் மாதிரியாகவும், உனக்கு வஞ்சகமே செய்யத் துணியாதவன் போலவும் நடித்தான். நய வஞ்சகன்! ஆனால் சுந்தரியைக் கண்டதும், அவளுடைய காதல் பித்தம் தலைக்கேற ஏற, ஆள் ஒரேயடியாக மாறிவிட்டான்.

சுந்தரம் : இதற்கெல்லாம் காரணம் நீதானேடா! உன்னைச் சும்மா விடப் போகிறேனா!......

கார்மேகம் : இவ்வளவு தூரம் கேட்டு விட்டு ரஸமான பகுதியைக் கேட்காமல் குறுக்கிடுகிறாயே!

சுந்தரம் : அதை நீயே வைத்துக் கொள்; என்னிடம் ஒன்றும் சொல்ல வேண்டாம்.

கார்மேகம் : சுந்தரம்! நான் சொல்லும் புத்திமதியைக் கேளப்பா! இந்த வஞ்சகி சுந்தரியை மறந்து விடப்பா! இனிமேல் பெண்களை நம்பவே நம்பாதே. 'இந்திரன் கெட்டதும் பெண்ணாலே, சந்திரன் கெட்டதும் பெண்ணாலே' என்னும் பழமொழியைக் கேள்விப்பட்டதில்லையா? பூனை போல் சாதுவாகத் தோற்றம் அளிக்கும் பெண்கள்தான் எல்லோரையும் ஏமாற்றி விடுகிறார்கள். வஞ்சனை செய்வதற்கும் தயங்குவதில்லை. அப்படி ஏமாறாமல் இருக்க வேண்டுமானால், இந்தக் கார்மேகத்தின் ஒரு சிறிய மூளை எவ்வளவு கூர்மையாக வேலை செய்கிறதோ, அதே போல் உன் மூளையும் வேலை செய்ய வேண்டும்! சும்மாவா? இந்தக் கார்மேகத்தை, எந்தப் பெண்ணாவது ஏமாற்றும்படியாக வைத்துக் கொள்வேனா?

(புறப்பட்டுச் சென்ற சுந்தரம் திரும்பி வருகிறான்)

சுந்தரம் : கார்மேகம், உன் ஹாஸ்யமும் வீரமும் போதும்; சீக்கிரம் சொல்! சுகுணனும் சுந்தரியும் இப்போது எங்கே இருக்கிறார்கள்?

(கார்மேகத்தின் மார்பில் கையைப் பலமாக வைத்து அழுத்துகிறான்)

கார்மேகம் : அப்பா மைத்துனா, உன் தங்கையின் கணவனை இப்படித்தானா கேவலமாக நடத்துவது?

சுந்தரம் : வீண் வாதம் செய்யாதே. அவர்கள் எங்கே? சீக்கிரம் சொல்.

கார்மேகம் : ஐயோ! உன் பிடி என் மென்னியைக் கெட்டியாகப் பிடிக்கிறதே, மூச்சே விட முடியவில்லையே.

சுந்தரம் : சொல்ல இவ்வளவு தாமதமா?

(சுந்தரம் கார்மேகத்தின் மென்னியை இறுகப் பிடிக்கிறான்.)

கார்மேகம் : ஆ... (வலியால் கத்துகிறான்.) சொல்லுகிறேன், சொல்லுகிறேன். கொஞ்சம் தயவு செய்து பிடியைத் தளர்த்தி விடப்பா.

(சுந்தரம் பிடியை விடுகிறான்)

அப்பா! அப்பா! சொல்லுகிறேன். அவர்கள் இருவரும் என் வீட்டில் தான் இருப்பார்கள். ஆனால் அவர்கள் சுந்தரியின் தோழியாகிய ஸரஸாவின் அத்தை வீட்டிற்குப் போகப் போவதாகச் சொன்னார்கள்.

சுந்தரம் : சரி போ; நீ மட்டும் உண்மையைத் தவிர ஏதாவது உளறி யிருந்தால் இந்தச் சுந்தரம் உன் மென்னியைத் திருகிக் கிள்ளிப் பதம் பார்க்காமல் விட மாட்டான். பய மிருக்கட்டும். ஜாக்கிரதை! இந்தச் சுகுணன் என்னை இவ்வாறு துரோகம் செய்வான் என்று நினைக்கவே இல்லை. இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமா என்று செய்து விட்டானே. 'சரி; சுகுணனை நான் சும்மாவிடப் போவதில்லை. பழிக்குப் பழி தீர்த்தே விடுவேன்.

கார்மேகம் : நன்ருகச் செய்யப்பா. சுகுணன் கழுத்தைச் சீவு; அவன் மண்டையை உடை; அவன் குடலை அறு ; கைகளையும் கால்களையும் வெட்டு; அவனைச் சித்திரவதை செய்!

சுந்தரம் : இனி இந்தச் சுந்தரி இருக்கும் திக்கையே நாட மாட்டேன். பெண் ! புத்தி பின்புத்தி தானே !

கார்மேகம் : ஆம் மைத்துனு ; அவள் வஞ்சகி; அவளை லேசில் விடாதே!

சுந்தரம் : அவளைப் வஞ்சகி என்று சொல்ல? நீ யாரடா?

(கார்மேகம் பயந்து ஓடுகிருன்)

சுந்தரி இவ்வாறு என்னைத் துரோகம் செய்ய மாட்டாள் என்று நினைக்கிறேன். இதில் ஏதோ மர்மம் இருக்கிறதெனத் தோன்றுகிறது. ஆனல் நான் வஞ்சிக்கப்பட்டால், வஞ்சித்தவர்களை லேசில் விட மாட்டேன்.

(சுந்தரம் போகிருன் ; மாணிக்கம் தொடருகிருன்; திரை விழுகிறது.)

★

காட்சி - 10

இடம்: ஸரஸாவின் அந்தை வீடு.

காலம்: மாலை

[குணவதியும் சுகுணனும் ஒரு புற மாகவும், சுந்தரி ஒரு புறமாகவும் உட்கார்ந்து கொண்டிருக்கிறார் கள். வேலைக்காரன் ஒருவன் ஒரு கடிதத்துடன் வருகிறான்.]

வேலைக்காரன்: *அம்மா! இந்தக் கடிதத்தை உங்களிடம் கொடுக்கச் சொன்னாங்க.*

[வேலைக்காரன் போகிறான்.]

சுகுணவதி: *என் தகப்பனாரிடமிருந்து தான் வந்திருக்கிறது. நான் எழுதின கடிதத்திற்குப் பதில் போல் இருக் கிறது.*

சுகுணன்: *என் கண்ணே! குணவதி, அதைப்பிரித்துப் படிக்காதே! உன் தகப்பனார் உன் வேண்டு கோளுக்கு ஒருகாலும் இணங்க மாட்டார் கோபித்துக் கொண்டு ஏதாவது தாறுமாறாக எழுதி யிருப்பார்.*

குணவதி: *எப்படியாயினும் படித்துத் தான் ஆகவேண்டும். "அன்புக் குகந்த மகளே! குணவதி! உன்னிஷ்டப் படியே உன் கலியாணத்திற்குச் சம்மதத்தைத் தந் தேன், உடனே புறப்பட்டு வா, மருமகப் பிள்ளையு டன். நாளைக்கே முகூர்த்தத்திற்கு ஏற்பாடு செய்து விட்டேன். அநேக ஆசீர்வாதம்."*

சுகுணன்: *குணவதி இது வேடிக்கைக்குச் சமய மில்லை,*

குணவதி : நீங்களே படித்துப் பாருங்கள்.

[சுகுணன் குணவதியிடமிருந்து கடிதத்தை வாங்கிப் படிக்கிருன்.]

சுகுணன் : உண்மைதான் குணவதி ; உண்மை. இனி நீ தாமதிக்கக் கூடாது. உன் தகப்பனுரைச் சந்திக்க ஏற்பாடு செய்.

சுந்தரி : அதோ தூரத்தில் சுந்தரம் வருகிருர் போல் இருக்கிறதே.

[சுந்தரம் கோபமாக வருகிருன்.]

சுந்தரம் : என்னை வஞ்சித்த துரோகியே! உன்னை இப்பொழுதே உயிருடன் யமலோகத்திற்கு அனுப்பி விடுகிறேன். பாசாங்குக்காரக்கள்ளி!

சுந்தரி : ஹா! சிவ சிவா! என்ன தகாத வார்த்தைகளை உச்சரிக்கிருர்! நாராசம் போல் காதில் விழுகின்றனவே. ஐயோ! குணவதீ, சுகுணரே, சீக்கிரம் வாருங்கள்.

சுந்தரம் : எங்கே அந்தத் துரோகி சுகுணன்? சுகுணன் என்ற பெயருக்கே பொருத்தமில்லாதவன்!

[சுகுணனைக் காண்கிருன்.]

டேய்! பசுத்தோலைப் போர்த்துக் கொண்டிருக்கும் ஓநாயே! உன் வண்டவாளமெல்லாம் வெட்ட வெளிச்சமாகிவிட்டன. இப்போது என் கத்தி மிகுந்த ருசியுடன் உன் ரத்தத்தைப் பருகப் போகிறது.

[சுகுணனைக் குத்த யத்தனிக்கையில் குணவதி தடுத்து விடுகிருள். கத்தி கீழே விழுகிறது. குணவதி எடுத்து வைத்துக் கொள்கிருள்.]

குணவதி: என்ன கலவரம் இது? சுந்தரம் உனக்கென்ன, புத்தி கலங்கி விட்டதா?

சுகுணன்: சுந்தரம், பதறாதே; எதற்காக இந்தக் கோபம் என் மேல்? காரணத்தைச் சொல்லிவிட்டு என்னைக் கொல்லப்பா.

சுந்தரம்: நய வஞ்சகனே! என்னை வஞ்சித்துச் சுந்தரியை மணம் செய்து கொண்டு விடலாம் என்று நினைத் தாயே, அது முடியாத காரியம்.

சுந்தரி: சுந்தரம், சுந்தரம்!

சுந்தரம்: அட, சீ! போ! பாதகி; என் முன் நில்லாதே, போ.

குணவதி: அண்ணா சுந்தரம்! உன் கண்களை நன்றாகத் திறந்து கவனி! என் அன்பர் சுகுணர் என்னிடமே இருக்கின்றார். உன் சுந்தரி உனக்காக, பாவம், சாதக பட்சி மழைக்காகக் காத்துக் கொண்டிருப் பது போல் காத்துக் கொண்டிருக்கிறாள்.

சுந்தரம்: அப்படியா! அறியாத் தனத்தால் என்ன மடத் தனம் செய்து விட்டேன். அருமைத் தங்கை குண வதியின் வாழ்விலேயே மண்ணைப்போட இருந் தேனே! அவளே என்னைக் காப்பாற்றி விட்டாள். குணவதி, என்னை மன்னித்து விடு. சுந்தரீ, என்னை மன்னித்து விடு. என்னே, என் மதியீனம்! பொறா மைத் தீயினால் என் அறிவே தீய்ந்து விட்டது. ஆ! என் தோழா, சுகுணா, உன் மேல் அபாண்டமாகப் பழி சுமத்தினது மல்லாமல் உன்னைக் கொல்லவும் துணிந்தேனே! நீ என்னை மன்னிப்பாயா? ஆ, என் கண்மணி சுந்தரீ, நான் விடுத்த தகாத வார்த்தை

களெல்லாம் உன் மிருதுவான இதயத்தில் கூரிய ஈட்டிகள் போல் பாய்ந்து, உன்னைச் சித்திரவதை செய்திருக்குமே.

சுந்தரி : அன்பரே, சுந்தரம்! உங்கள் மேல் ஒரு தவறும் கிடையாது. மேலும், நீங்கள் விடுத்த ஈட்டிகள் என் இதயத்தைத் தாக்கும் போது அவைகள் தெய்வ சகாயத்தால் மலர்களாக மாறி விட்டன. உங்கள் அன்பு புனிதமானது என்பதற்கு வேறு அத்தாட்சி வேண்டுமா? நானே பாக்கியவதி!

சுந்தரம் : கண்ணே, சுய நினைவு பெற்றேன். இனி உன் அன்பு தான் எனக்கு ஆதரவு தர வேண்டும். பிராண ஸகீ!

குணவதி : சுந்தரீ, என் அண்ணா இவ்வளவு வீராவேசம் கொண்டவன் என்று எனக்கு இத்தனை நாட்களா கத் தெரியாது.

சுகுணன் : ஆம் குணவதி; கொஞ்சம் ஆவேசம் அதிகரித் திருந்தால் என் கதியும் உன் கதியும் என்னவாகி யிருக்கும்?

சுந்தரம் : நண்பா சுகுணா! அப்படிச் சொல்லாதே. உன் அம்புச் சொற்களை இனி விடாதே. அவைகளைத் தடுக்க இரும்பினால் செய்யப்பட்ட ஹிருதயம் எனக்கில்லை. எல்லோரும் என்னை மன்னித்து விடுங்கள். காதல் என்னும் போதையானது என் அறிவை மந்தப் படுத்தி விட்டது.

சுகுணன் : சுந்தரம். இனி ஆக வேண்டிய காரியங்களைக் கவனிப்போம்......யாரோ வருகிறார்கள் போலிருக் கிறதே. ஆம்; கார்மேகமும் ஜயாவும் வருகிறார்கள்.

குணவதி, சுந்தரம், சுந்தரி, நாம் இப்போது வெகு ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். இல்லாவிடில் கைக் கெட்டினது வாய்க் கெட்ட வில்லை என்ற கதையாய் முடிந்து விடும். சுந்தரம், நீயும் சுந்தரியும் மறைவாக இருங்கள்.

(கார்மேகமும் ஜயாவும் வருகிருர்கள்.)

என்ன கார்மேகம்! ரொம்பவும் குதூகலத்துடன் வருகிருயே பக்கத்திலிருப்பது யார்?

கார்மேகம்: யாரென்று தெரியவில்லையா.........? ஆஹா! ஆஹா! குணவதிதான். இப்போதுதான் நீ சுந்தரியின் மையலில் மூழ்கிக் கிடக்கிருயே! உனக்கு எங்கே தெரியப் போகிறது?

சுகுணன்: அப்படியா! குணவதியா! ரொம்ப சந்தோஷம்.

கார்மேகம்: நாளைக் காலையில் நாங்கள் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேம். விடியற்காலையில் முகூர்த்தம். அடுத்த ஊரில் என் நண்பன் இருக்கிருன். கல்யாணத்தை அவன் வீட்டில் வைத்துக் கொண்டிருக்கிறேம். இது ஒரு ரகசியமான கல்யாணம். ஹா! இந்தக் கார்மேகத்தின் சிறிய மூளையின் கூர்மையான வேலை எப்படி என்று இப்பவாவது விளங்குகிறதா?.........உம்..... நாளைக் காலையில் கலியாணம் முடிந்ததும் நேராக நீலமேகம் பிள்ளையிடம் 'மாப்பிள்ளையும் பெண்'ணுமாகப் போகப் போகிறேம். என் கல்யாணத்திற்கு நீயும் சுந்தரியும் அவசியம் வர வேண்டும்.

சுகுணன்: ஆஹா! அப்படியே வருகிறேம். உனக்கும் உனக்குப் பெண்ஜாதியாக வரப் போகிறவளுக்கும்

என் மனமார்ந்த ஆசிகள். நீங்கள் இருவரும் பல்லாண்டு பல்லாண்டு வருஷங்கள் இல்லற வாழ்க்கையில் ஈடு பட வேண்டும். சென்று வா!

கார்மேகம்: இது கார்மேகமா, என்ன! இந்தச் சிறிய மூளை எவ்வளவு கூர்மையாக வேலை செய்கிறது பார்த்தாயா?

(ஐயாவுடன் கார்மேகம் போய் விடுகிறான். சுந்தரமும் சுந்தரியும் மறைந்திருந்த இடத்தி லிருந்து வருகிறார்கள்.)

குணவதி, சுகுணன்:
சுந்தரம், சுந்தரி: } (சிரிக்கிறார்கள்)

குணவதி: சுகுணரே! இனி நமக்கு ஒரு கவலையும் இல்லை. என் தகப்பனாரும் என்னை மன்னித்து, என் இஷ்டம் போல் மணம் செய்து கொள்ள அனுமதி அளித்து விட்டார். இனி நமக்குக் கவலை ஏன்?

சுகுணன்: ஆம்! குணவதி! எதற்கும் நாம் நாளைக் காலை வரையில் இங்கேயே இருந்து விட்டு, கார்மேகமும் ஐயாவும் கல்யாணம் செய்து கொண்டு உன் தகப்பனார் வீட்டிற்குச் சென்று விட்டார்கள் என்று தெரிந்ததும் செல்வோம்.

குணவதி: அப்படியே ஆகட்டும், சுகுணரே!

சுகுணன்: நண்பா சுந்தரம், எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது.

சுந்தரம்: என்ன?

சுகுணன்: நாளைக்கே உன் கல்யாணத்தையும் முடித்து விடலாம். ஆனால் அதற்கு நீ ஒரு சிறிய காரியம் செய்யவேண்டும்.

சுந்தரம்: சுகுணா! நீ சொல்லுகிறபடியே செய்கிறேன்.

சுகுணன்: சுந்தரியின் தகப்பனாராகிய ராஜரத்தினம் பிள்ளையின் மனம், தன் மகளைக் காணாததால் தவித்துக் கொண்டிருக்கும் நீ அவருக்கு ஒரு கடிதம் எழுதி, அதில் அவர் சுந்தரியை உயிருடன் இருப்பதற்குள் பார்க்க வேண்டுமானால், மறுநாள் நீலமேகம் பிள்ளையின் வீட்டிற்கு வரும்படியாக எழுது. மேலே ஆக வேண்டியதை நான் பார்த்துக் கொள்கிறேன்.

(எல்லோரும் போகிறார்கள்.)

★

காட்சி - 11

இடம் : கார்மேகத்தின் நண்பன் வீடு.

காலம் :— காலை.

(கார்மேகத்துக்கும் ஜயாவுக்கும் கல்யாணம் நடக்கிறது. அங்கே குணவதியும் சுகுணனும் தோன்றுகிறார்கள்.)

சுகுணன் : கார்மேகம்! நீ ஒரு பெரிய அதிர்ஷ்டசாலி. இவ்வளவு எளிதில் காரியத்தை நன்றாக முடித்துக் கொண்டு விட்டாயே!

குணவதி : கார்மேகம், உங்கள் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்! மனதிற்கிசைந்த பெண்ணையே கல்யாணம் செய்து கொண்டு விட்டீர்கள்.

கார்மேகம் : அதிர்ஷ்டம்தான். ஆனால் வெறும் அதிர்ஷ்டம் இல்லை. எல்லாம் இந்தக் கார்மேகத்தின் சிறிய மூளையின் கூர்மையான வேலை, எப்படி? சுகுணா! நான் இனி தாமதிக்கக் கூடாது. நீலமேகம் பிள்ளையின் வீட்டிற்கு நானும் என் மனைவியும் அதிவிரைவில் செல்லவேண்டும்.

(எல்லோரும் போகிறார்கள்)

★

காட்சி - 12

இடம் : நீலமேகம் பிள்ளை வீடு.

காலம் : காலை.

(கல்யாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.)

நீலமேகம் பிள்ளை : டேய் மாணிக்கம், கல்யாணத்திற்கு எல்லாம் தயாராகி விட்டதா? (தனக்குள்) குணவதி என் மகள்; அவள் கல்யாணத்தை இந்த ஊரிலே கண்டிராதபடி அவ்வளவு ஆடம்பரத்துடன் நடத்தப் போகிறேன்!

மாணிக்கம் : எல்லாம் தயாராகி விட்டது, எஜமான். புரோகிதர்கள், மேளக்காரர்கள், எல்லோரும் வந்து விட்டார்கள்.

நீலமேகம் : என்னடா மாணிக்கம், உன் எஜமானன் சுந்தரம் எங்கே? கல்யாணத்திற்குக் கூட வரமாட்டானு?

மாணிக்கம் : எஜமான் கல்யாணத்திற்குக் கட்டாயம் வந்து விடுவார் என்றே நினைக்கிறேன். எஜமானன் சுந்தரம், அந்த ராஜரத்தினம் பிள்ளையின் மகள் சுந்தரியைத்தான் மணந்து கொள்வேன் என்று ஒரே பிடிவாதமாக இருக்கிறுர். நீங்கள் ராஜரத்தினம் பிள்ளையிடம் ஒரு வார்த்தை சொன்னுல்...

நீலமேகம் : அதிகப் பிரசங்கித்தனமாய் ஏன் உளறுகிறுய்? நானுவது அந்த மனிதனைப் போய்ப் பார்ப்பதாவது! அவரே இங்கே வந்து என்னைக் கேட்டாலொழிய வேறு வழி கிடையாது. ஆனுல் சுந்தரம் சுந்தரி

யைக் கல்யாணம் செய்து கொள்வதில் எனக்கு ஒரு ஆக்ஷேபணையும் கிடையாது.

(ராஜரத்தினம் பிள்ளை வருகிறார்.)

ராஜரத்தினம் பிள்ளையா? ஏது இவ்வளவு அவசரமாக, அபூர்வமாக...?

ராஜரத்தினம் பிள்ளை : நீலமேகம் பிள்ளை அவர்களே, இதென்ன ஆச்சர்யமாக இருக்கிறதே! இந்தக் கடிதத்தைப் படித்துப் பாருங்கள்.

நீலமேகம் : உம், சுந்தரம் எழுதியிருக்கிறான் போலிருக்கிறது.

ராஜரத்தினம் : ஆம், நீலமேகம் பிள்ளை. கடிதத்தைப் படியுங்கள்.

நீலமேகம் : "ராஜரத்தினம் பிள்ளை அவர்களுக்கு,
வந்தனம்.
தங்களுடைய மகள் சுந்தரியை, உயிருடன் கடைசி முறையாகப் பார்க்க விரும்பினால் நாளைக் காலையில் நீலமேகம் பிள்ளையின் வீட்டில், கட்டாயமாகக் காத்துக் கொண்டிருங்கள். இல்லாவிடில், சுந்தரியை, உங்கள் வாழ்நாளில் காணவே முடியாது."

சுந்தரம்.

ராஜரத்தினம் : இது என்ன அநியாயம், அக்கிரமம்!

நீலமேகம் : இதில் என்ன அநியாயம், என்ன அக்கிரமம் இருக்கிறது? உங்களுடைய பெண்ணை உங்களுக்கு அடக்கத் தெரியவில்லை. என்னுடைய சாமர்த்தியம் உங்களுக்கு இருந்தால்தானே! போயும் போயும் அந்த மார்த்தாண்டத்திற்குக் கொடுப்பதாக உங்கள் மகள் சுந்தரியைப் பயமுறுத்தினீர்.

அவள் ஓடி விட்டாள். அவளே சுந்தரத்தை இவ்வாறு விட்டு எழுதச் சொல்லி இருக்கிறள். என்னிடம் வீணுக வாதாட வேண்டாம்.

ராஜரத்தினம். ஐயா, நீலமேகம் பிள்ளையே! என் மகள், சுந்தரத்துடனேயே நன்ருக வாழட்டும். என் சம்மதத்தை இப்போதே கொடுத்து விடுகிறேன். உங்கள் மகனிடத்தில் சொல்லி என்னையும் என் மகளையும் ஆதரியுங்கள்.

மாணிக்கம். எஜமான், ராஜரத்தினம் பிள்ளை அவர்களே! நீங்கள் இதைச் சொல்லவேண்டுமென்று தான் என் எஜமான் சுந்தரம் காத்துக் கொண்டிருக்கிருர். இப்போதே நான் போய் எங்கள் எஜமானரையும் உங்கள் மகள் சுந்தரியையும் அழைத்து வருகிறேன்.

ராஜரத்தினம்: மகா ராஜஞக அழைத்து வா, அப்பா! "பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு" இதை மக்கட் பேறு பெற்றவர்கள் தானே அறிய முடியும்! என் மகள் சந்தோஷமாக இருந்தால் அதுவே எனக்குப் போதும்.

(மாணிக்கம் போகிருன். கார்மேகம் வருகிருன்.)

நீலமேகம்: ஆ! வாருங்கள். மருமகப்பிள்ளை அவர்களே! உங்களை மன்னித்து விட்டேன். கல்யாணத்திற்கு எல்லாம் தயாராக இருக்கிறது. சீக்கிரம் உடைகளை யெல்லாம் மாற்றிக் கொண்டு வாருங்கள் ஆமாம், என் அருமைப் புதல்வி குணவதி எங்கே?

கார்மேகம்: குணவதி வெளியில் காத்துக் கொண்டிருக்கிருன். நாங்கள் இருவரும் இன்று காலையில் புரோகிதர்களை வைத்துக் கொண்டு சாங்கோபாங்கமாகக் கல்யாணம் செய்துகொண்டு விட்டோம்......

நீலமேகம்: கார்மேகம்! சீக்கிரம் குணவதியை உள்ளே அழைத்து வா. என் மகளைக் காணத் துடித்துக் கொண்டிருக்கிறேன்.

(கார்மேகம் போய் ஜயாவை அழைத்து வருகிருன்.)

என் அருந்தவப் புதல்வி கண்மணி குணவதி, என் அருகே வா! உன்னை உச்சி முகர்ந்து.........

(ஜயாவின் முகத்தைக் கண்டு நீலமேகம் திடுக்கிடுகிருர்.)

இதென்ன மோசம். இவள் என் மகள் இல்லையே! கார்மேகம்! என்ன? என்னை மோசம் செய்ய யத்தனிக்கிருயா?...... இதோ, பார்! இது அந்தப் பிசாசுத் தோழி ஜயா அல்லவா?

கார்மேகம்: என்ன! சரியாகக் கவனித்துப் பாருங்கள்! ஆ! குணவதி, வெட்கப்படாதே! உன் தகப்பனுரைக் காண இவ்வளவு வெட்கமா?

ஜயா: அப்பா! அப்பா! என்னைத் தெரியவில்லையா? என்னைக் கைவிட்டு விடாதீர்கள்.

நீலமேகம்: அட மூதேவி! தூரப் போ! அப்பாவாம் அப்பா. என்னைத் தொட்டு விடாதே. டேய் யாரடா அங்கே? இந்த மூதேவியை அப்புறப்படுத்து.

கார்மேகம்: கண்ணே! குணவதி. உன் தகப்பனருக்கு இன்னும் கோபம் தணியவில்லை போலிருக்கிறது...... மறுபடியும், அவர் கிட்டே சென்று......

(மாணிக்கமும் சில வேலைக்காரர்களும் வருகிறார்கள்.)

மாணிக்கம்: என்ன! என்ன! என்ன ஆபத்து வந்து விட்டது?

நீலமேகம்: இந்தக் கார்மேகம் யாரையோ கல்யாணம் செய்து கொண்டு விட்டு என் பெண் குணவதி என்று சாதிக்கிறான்.

கார்மேகம்: தெய்வமே! இந்த நீலமேகம் பிள்ளைக்கு இவ்வளவு கல் நெஞ்சா? இந்தக் குணவதியையும் என்னையும் இப்படி அவமானப்படுத்துகிறாரே?

(சுகுணனும் குணவதியும் வருகிறார்கள். குணவதி முகத்தை மறைத்துக் கொண்டிருக்கிறாள்.)

நீலமேகம்: சுகுணா! நீ ஏன் வந்தாய்? உன்னை யார் இங்கே அழைத்தது?

சுகுணன்: நான் இந்தப் பெண்ணின் கணவனாகப் போகிறவன்.

கார்மேகம்: ஆம். இந்த இரண்டு பேர்களுடைய உண்மைக் காதலுக்கு உதவியாக இருந்ததற்கு நான் மிகவும் பெருமைப் படுகிறேன்.

நீலமேகம்: என்ன?

கார்மேகம்: உங்களுக்கு மறந்துபோய் விட்டதா? நான் முன்னமேயே சொன்னேனே; சுகுணனை எனக்குப் போட்டியாக வராமல் செய்வதற்காக இந்தப்

பெண்ணிடம் காதல் கொள்ளும்படிச் சதி செய்து, காரியத்தையும் முடித்துக் கொண்டு விட்டேன். இப்பொழுதாவது ஞாபகம் வருகிறதா ?

(குணவதியைப் பார்க்கிறார் நீலமேகம்.)

நீலமேகம் : ஆ! என் மகள் குணவதி! கார்மேகம், இவள் தான் என் மகள், குணவதி; உனக்குக் கண்களில்லையா ?

கார்மேகம் : உங்களுக்குத் தான் கண்கள் தெரியவில்லை. இதோ பாருங்கள், உங்கள் அருமை மகள்.

(ஐயாவைச் சுட்டிக் காண்பிக்கிறான்,)

நீலமேகம் : இதென்ன இது, மூளையே குழம்பிப் போய்விடும் போல் இருக்கிறதே!

ஐயா : நீலமேகம் பிள்ளை அவர்களே, உங்கள் குழப்பத்தை நான் தெளிய வைக்கிறேன். மேலும், எல்லாவற்றையும் எல்லோரும் அறியும் சமயம் வந்து விட்டது ; கேளுங்கள்.

(எல்லோரும் சூழ்ந்து கொள்கிறார்கள்.)

நீலமேகம் பிள்ளை, நீங்கள் என்னை வேலையை விட்டு நீக்கி, வீட்டை விட்டுத் துரத்தினீர்களே, அப்போது நான் பெட்டியை எடுத்துக் கொண்டு போய் விடுகிறேன் என்று சொன்னேனே.........

நீலமேகம் : ஆம்.

ஐயா : நீங்கள் என்னைத் துரத்தவில்லை. என்னுடைய உடைகளை அணிந்து கொண்டிருந்த உங்கள் அருமைப் புதல்வி குணவதியைத்தான் அடித்துத் துரத்தினீர். போதாக் குறைக்குக் குணவதியின் அறையில்

என்னைத்தள்ளித் தாளிட்டு விட்டீர். கதையை மேலே வளர்ப்பானேன்? கார்மேகத்தை நான் காதலித்து, அவரை இன்று கல்யாணம் கூடச் செய்து கொண்டு விட்டேன்.

கார்மேகம் : ஐயோ! நான் குணவதியின் தோழி ஐயாவையா கல்யாணம் செய்து கொண்டு விட்டேன்! அடி! மோசக்காரி! என்னையா ஏமாற்றி விட்டாய். ஆ! ஆ!

சுகுணன் : நண்பா, கார்மேகம்! சண்டையிலும், காதலிலும், நியாயம் அநியாயம் என்று பார்க்கக் கூடாது. என்ன, நீயே எனக்குச் சொன்னாயே, ஞாபகமில்லையா......? நீலமேகம் பிள்ளை அவர்களே! நான் சொல்வதை நம்புங்கள். கார்மேகம் என்னும் பெயர் பூண்ட இந்த நீசன், உங்கள் பெண்ணை, உங்களுடைய பணத்திற்கு ஆசைப் பட்டு எப்படியாவது கல்யாணம் செய்து கொண்டு விட வேண்டும் என்ற எண்ணத்தால்தான் இந்த ஊருக்கே வந்தவன். "தன் வினை தன்னைச்சுடும்" என்ற நீதியை அறிய மாட்டான் போலிருக்கிறது. மேலும், கார்மேகத்திற்குச் சொத்து சுதந்திரமும், நீங்கள் நினைத்தபடி நூறு வேலியும் கிடையாது. ரொக்கத்தில் இருபது லக்ஷமும் கிடையாது ஏதோ ஒரு சிறு வீடும் ஒரு வேலி நிலமும் இருக்கிறதாகக் கேள்வி. உண்மையை அறிய வேண்டுமானால் நீங்களே விசாரித்துக் கொள்ளுங்கள்.

நீலமேகம் : கார்மேகம் இவ்வளவு பெரிய மோசக்காரனா?

சுகுணன் : இல்லாவிட்டால், இந்த ஐயாவின் அழகில் மயங்கி எவனாவது அவளைக் கல்யாணம் செய்து கொள்ளத் துணிவானா?

(கார்மேகத்தைப் பார்த்து)

காா்மேகம்! இனி நீ உன்னுடைய மனைவியுடன் பதினாயிரம் வருஷங்கள் வாழ வேண்டும்.

குணவதி : காா்மேகம்! காதல் விஷயத்தில் நீங்கள் சொல்லிய படி ஏமாற்றுவது, ஏமாந்து போவது சகஜம் தானே! அதனால் வருத்தப் படாதீர்கள்.

சுகுணன் : குணவதி! காா்மேகத்தின் சிறிய மூளை எவ்வளவு கூர்மையாக வேலைகள் செய்திருக்கிறது, பார்த் தாயா!

குணவதி : ஆம்! பெரிய மூளை தான்; வெகு கூர்மை!

காா்மேகம் எல்லோரும் என்னை ஏமாற்றி என்னை ஜயா வைக் கல்யாணம் செய்து கொள்ளும்படிச் செய்து விட்டார்கள். இதற்கு நான் உடன் படவே மாட் டேன்! மாட்டேன்!

ஜயா : காா்மேகம்! எங்கே ஓடப் பார்க்கிறீர்கள்? என்னை விட்டு ஓட முடியுமா? பாம்பின் வாயில் அகப் பட்டுக் கொண்ட தவளைக்கு விமோசனம் ஏது? (பரிகாசச் சிரிப்பு)

காா்மேகம் : போ!.........போ! என்னை விடு! என்னை விட்டு விடு.

நீலமேகம் : ஜயா! அவனை விடாதே! அவன் உன்னை ஏமாற் றப் பார்த்தால் என்னிடம் சொல்லு. நியாய ஸ்தலத்தில் போய் உனக்கு ஜீவனாம்சம் வாங்கிக் கொடுத்து, பிறகு மனைவிக்குத் துரோகம் செய்ய முயற்சி செய்ததற்காக அவனைக் காராக்ருஹத்தில் தள்ளச் செய்கிறேன்.

காா்மேகம் : வேண்டாம்; அப்படி ஒன்றும் செய்து விடா தீர்கள். ஜயா! நான் உன் அடிமை.

நீலமேகம் : பலே ஐயா! உன் பெயருக்குத் தகுந்தபடி காரியத்தை ஜயத்துடன் முடித்துக் கொண்டு விட்டாயே. (குணவதியைப் பார்த்து) குணவதி! நீ சுகுணனைப் பூரணமாகக் காதலிக்கிறாயா ? அவனை மணந்து கொள்ள விரும்புகிறாயா ?

குணவதி : ஆம், தந்தையே! நான் செய்த தவறுகளை மன்னித்து, என்னைச் சுகுணருக்கே விவாகம் செய்து கொடுத்து விடுங்கள்.

சுகுணன் : தங்களை ஏமாற்றிக் குணவதியைத் திருட்டுத் தனமாகக் கல்யாணம் செய்து கொள்வது தவறு என்று அறிந்தே, குணவதியுடன் உங்களிடம் வந்து அனுமதியும் ஆசிர்வாதமும் பெற்றுப் போகலாம் என வந்தேன். குணவதியை, இமைகள் கண்களை எப்படிக் காப்பாற்றுகின்றனவோ, அப்படியே நான் காப்பாற்றுவேன். மேலும் குணவதியைக் கல்யாணம் செய்து கொள்வதனால், அவள் சொத்தின் பேரில் ஆசை வைத்துக் கொண்டிருக்கிறேன் என்று எண்ண வேண்டாம். என்னிடம் இருக்கும் சொத்து சிறிதாகிலும், அதற்கு எஜமானி குணவதியே!

நீலமேகம் : குணவதி! விதிக்கு வேலி போட முடியுமா ? சுகுணன் உனக்குக் கணவனாக வாய்க்க வேண்டுமென்றிருந்தால் அப்படியேதான் நடக்கும். சரி; குணவதி, உனக்கு வரப் போகும் கணவனிடம் சொல்லு. பைத்தியக்காரத் தனமாகச் சொத்து சுதந்தரம் ஒன்றும் வேண்டாம் என்கிறான். கட்டாயமாய் அவனுக்கு ஐம்பது வேலி நிலமும், ஐந்து லக்ஷமும் சீராகக் கொடுக்கப் போகிறேன் என்று சொல்லு.

சுகுணன் : நீலமேகம் பிள்ளை அவர்களே! அந்தச் சொத்து, பணம் அனைத்தும் குணவதியின் பேரிலேயே இருக்கட்டும்.

(சுந்தரம், சுந்தரி இருவரும் வருகிறார்கள்)

நீலமேகம் : இதென்ன! இது! ஓடிப்போன பெண்களெல்லாம் ஒருவர் பின் ஒருவராக இங்கேயே வருகிறார்களே!.........என்ன சுந்தரம், அருகே இருப்பது சுந்தரியா?

சுந்தரம் : ஆமாம் அப்பா! சுந்தரியும் நானும் வெகு நாட்களாக ஒருவரை ஒருவர் நேசித்துக் கொண்டு வருவது உங்களுக்குத் தெரிந்த விஷயம்.

(ராஜரத்தினம் பிள்ளை வருகிறார்)

குணவதிக்கு, ஒரு கார்மேகம் முளைத்து எவ்வளவு கஷ்டங்கள் விளைவித்தானோ, அதே போல் சுந்தரிக்கு ஒரு மார்த்தாண்டம் பிள்ளை முளைத்திருந்தானும். உங்கள் உத்தரவைப் பெற்றுக் கொண்டு, என் தந்தையின் அனுமதியையும் பெற்றுக் கொண்டு கல்யாணம் செய்து கொள்ளலாம் என்று......

ராஜரத்தினம் : அம்மா! சுந்தரீ! உன் பெற்றோரை இப்படித் தவிக்க விட்டு விட்டு ஓடி விட்டாயே! உன தாயார் சாப்பிடாமல் பட்டினியாய்க் கிடக்கிறாள், உன்னைக் காணாமல். மார்த்தாண்டம் உனக்கு வேண்டாமம்மா! உன் இஷ்டப்படியே, சுந்தரத்தைக் கட்டிக் கொண்டு சுகமாய் வாழம்மா.

02 : 37

நீலமேகம்: அப்பா, சுந்தரம்! ராஜரத்தினம் பிள்ளையே சம்மதம் கொடுத்த பிறகு......சரி. என் மனமார்ந்த ஆசீர்வாதம் எப்பொழுதும் உங்கள் இருவருக்கும் இருக்கும்.

ராஜரத்தினம்: நீலமேகம் பிள்ளை! நாம் எதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம்! ஸ்ரீமுகூர்த்த வேளைக்குள், இளம் காதலர்களைத் தம்பதிகளாக்கி விடுவோமே.

(இரண்டு ஜோடிகளுக்கும் கல்யாணம் நடக்கின்றது.)

5082

சுபம்